இனிது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடுகின்ற விவகாரம் தொடர்பில் நாளொரு சர்ச்சையும் பொழுதொரு குழப்பமும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இப்போது புதிய குழப்பம் ஒன்று பற்றிய தகவல் கசிந்திருக்கின்றது.

பக்கம் 02


# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 01 ஞாயிற்றுக்கிழமை 18.08.2019 கதிர் 286




# என்ன குற்றம் செய்தது ராஜபக்ஷ குடும்பம்? எம்மை விமர்சிப்பதை உடனே நிறுத்துங்கள்

## அரசியல்வாதிகள் மீது சீறுகிறார் கோட்டாபய

கொழும்பு, ஓக. 18

தமிழ்ப் பயங்கரவாதிகளின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை மீட்டெடுத்தது ராஜபக்ஷ குடும்பம். அப்படிப்பட்ட ராஜபக்ஷ குடும்பத்தினரை குற்றவாளிகள் என்று அரசியல்வாதிகள் சிலர் கண்டபடி விமர்சிக்கின்றார்கள். நாம் உண்மையில் என்ன குற்றம் செய்தோம்? எம்மை விமர்சிப்பதை உடன் நிறுத்துமாறு அந்த அரசியல்வாதிகளிடம் வேண்டிக்கொள்கின்றேன்.

– இவ்வாறு அச்சுறுத்தல் பாணியில் எச்சரிக்கை விடுத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்

பக்கம் 15

## யுத்தக் குற்றச்சாட்டுக்குள்ளான

# ஜெனரல் சவீந்திர சில்வா புதிய இராணுவத் தளபதி?

## இன்று பதவியேற்கலாம் எனத் தகவல்



ஜெனரல் சத்தியப்பிரிய



ஜெனரல் சவீந்திர சில்வா

கொழும்பு, ஒகஸ்ட் 18

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரின் போதான மோசமான யுத்தக் குற்றங்களின் சூத்திரதாரி என மனித உரிமைகள் அமைப்புகளாலும் தமிழர் தரப்புகளினாலும் கடுமையாகக் கண்டிக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டு வரும் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவை புதிய இராணுவத் தளபதியாக நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கீகாரம் வழங்கியிருக்கின்றார் என்றும், அவர் பெரும்பாலும் இன்று பதவி வேற்பார் என்றும் கொழும்பில் நேற்று செய்திகள் வெளியாகின.

பக்கம் 15

## கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

### மைத்திரியிடம் அவர் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 18

தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம்

பக்கம் 15

## மைத்திரியின் சகாக்களை சந்திக்கவுள்ளார் கோட்டா!

கொழும்பு, ஓக. 18

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு அடுத்த வாரம்

பக்கம் 15

## கோட்டாபயவின் பாவங்கள் ஒருபோதும் மன்னிக்கப்பட

### போட்டுத் தாக்குகின்றார் ராஜித

கொழும்பு, ஓக. 18

ஸ்ரீலங்காபொதுஜன பெரமுன வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அவர் பௌத்த விகாரைகள் மற்றும் இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடு

பக்கம் 15

## கூழைக் கலைந்தது ஐ.தே.முன்னணி!

### வேட்பாளர் தீர்மானம் இன்னுமில்லை

கொழும்பு, ஓக. 18

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக அமைச்சர் ராஜித சேனாரத்னவின் இல்லத்தில் நேற்றுக்

பக்கம் 15

## சிங்கள - பௌத்த கொள்கையுள்ள ஆட்சியே நாட்டுக்கு தேவையாம்!

### அமைச்சர் சஜித் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 18

சிங்கள – பௌத்த கொள்கைகளுடனான ஆட்சியே நாட்டுக்குத் தற்போது தேவைப்படுவதாக அமைச்சர் சஜித் பிரேமதாஸ

பக்கம் 15

## வகுப்புப் புறக்கணிப்பை கைவிட்ட யாழ். பல்கலைகழக மாணவர்கள்!

யாழ்ப்பாணம், ஓக 18

வகுப்புப் புறக்கணிப்பை மேற்கொண்டுவரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறித்துள்ளனர்.

பக்கம் 15

## நவம்பர் 16 இல் ஜனாதிபதித் தேர்தல் மாகாண தேர்தலுக்கு வாய்ப்பில்லை

கொழும்பு, ஓக. 18

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி நடக்கலாமென உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒக்ரோபர் முதல் வாரத்தில் இதற்கான அழைப்பு விடுக்கப்படலாம் என

பக்கம் 15

## போட்டியிடத் தகுதியானவரா கோட்டா? மனுத் தாக்கலின்போது தெரியவருமாம்



கொழும்பு, ஓக. 18

பட்டியலில் பெயர் இருக்கின்றதா – இல்லையா என்பது குறித்து யாரும் கவலையடையவேண்டாம். கோட்டாபய ராஜபக்ஷ தகுதியானவரா – இல்லையா என்பதை வேட்பு மனுத் தாக்கலின்போது

பக்கம் 02

## இராணுவம் மீது வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், ஓக. 18

வல்வெட்டித்துறை – ஊரிக்காடுப் பகுதியில் இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் இரவு இளைஞர் குழுவொன்றினால், வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பக்கம் 15

## ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் நேற்று வவுனியாவுக்கு வருகை



வவுனியா, ஓக. 18

இலங்கை வந்துள்ள மத அல்லது நம்பிக்கைச் சுதந்திரம் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் அகமட் கீட் நேற்று வவுனியா

பக்கம் 15

## இலங்கையின் அரசமைப்பு தொடர்பில் இளைஞர், யுவதிகள் நம்பிக்கை இழப்பு

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

இலங்கைஅரசமைப்புத் தொடர்பில் இளைஞர்–யுவதிகள்நம்பிக்கை இழந்துள்ளனர்.

– இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார் பிரதமர் ரணில்

பக்கம் 02

# சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து கிழக்கில் பேரணி!



மட்டக்களப்பு, ஓக. 18

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தக்கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் தலைவர் கே.ஜெகவண்ணன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் இந்த பொதுமக்கள் எழுச்சிப் பேரணி இடம்பெற்றது.

கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்து ஆரம்பமான இப் பேரணி கல்லடி பாலத்தினூடாக கிழக்குப் பல்கலைகழக மருத்துவ பீடத்திற்கு முன்னால் உள்ள சுற்றுவட்டம் வரை சென்று மீண்டும் ஆரம்பித்த இடத்திற்குச் சென்றது.

இப்பேரணியில் கலந்துகொண்ட பொதுமக்கள், சமூக சேவையாளரும் தமக்கு 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீட்டுத் திட்டங்களைப் பெற்றுத்தந்த மக்கள் விரும்பும் தலைவரான சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் கட்சியின் தலைமை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

சஜித் பிரேமதாஸவின் படம் பொறிக்கப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு கட்சியின் அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள், இளைஞர் அணியின் உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் இப் பேரணியில் கலந்துகொண்டனர். (ஐ)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க.

இளைஞர் – யுவதிகளைத் தன்னார்வச் சேவையில் ஊக்குவிக்கும் புதிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார். சுமார் 2000க்கும் மேற்பட்ட இளைஞர் – யுவதிகள் இதில் கலந்துகொண்டனர்.

நேற்றுக் காலை அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாட்டின் அரசியல் யாப்பு மற்றும் கொள்கையை மாற்றுவதற்கு தாம் முன்னிற்பதாகவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய அரசியல் அடிப்படைக்கு மத்தியில் ஏனைய நாடுகளுக்கு அமைவாக அபிவிருத்தி காண்பதற்கு எம்மால் முடியாமல் உள்ளது. இதற்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரச்சினைகள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

தற்போதுஉள்ளநடைமுறையை உடனடியாக மாற்றவேண்டும். இலங்கை அரசியல் யாப்பு தொடர்பில் இளைஞர் – யுவதிகள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

நாட்டிற்குச் சரியான கொள்கை இருக்கின்றதா என்பது தொடர்பில் அனைவரும் கண்டறிய வேண்டும். சர்வதேச இளைஞர் தினத்துக்கு அமைவாக இளைஞர் – யுவதிகளின் தன்னார்வச் சேவையை ஊக்குவித்து, இவர்களுக்கு தேசிய மட்டத்தில் பாராட்டுக்களை பெற்றுக் கொடுப்பதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் – என்றார். (ஐ)

## போட்டியிடத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஆணையாளர் தீர்மானிக்கட்டும் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமெரிக்காவின் மார்ச் முதல் ஜூன் மாத காலப்பகுதிக்கான விலக்களிப்புப் பட்டியலில் கோட்டாபயவின் பெயர் இருக்கின்றதா, இல்லையா என்பது குறித்து யாரும் கவலையடைய வேண்டியதில்லை.

ஒரு விடயத்தை நான் குறிப்பிடுகின்றேன். நாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்யும்போது கோட்டாபயராஜபக்ஷஇலங்கைபிரஜையா, இல்லையா என்பதைத் தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானிக்கட்டும். அதற்கு என்று ஒரு சட்ட முறைமை உள்ளது. அதற்கேற்ப நாங்கள் நடவடிக்கை எடுப்போம். கோட்டாபய போட்டியிடத் தகுதியானவரா, இல்லையா என்பதை வேட்பு மனுத் தாக்கலின் போது தேர்தல் ஆணையாளர் தீர்மானிக்கட்டும்.

அதேவேளை அமெரிக்காவின் மார்ச் முதல் ஜூன் மாத காலப்பகுதிக்கான விலக்களிப்புப் பட்டியலில் கோட்டாபயவின் பெயர் இருக்கின்றதா, இல்லையா எனக் கவலைப்படுகின்றவர்கள் ஒரு வேலையை செய்யலாம். அதாவது கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துடன் தொடர்புகொண்டு இந்த விடயம் குறித்து வினவலாமே? அதனை செய்யமாட்டார்கள். அதனைச் செய்தால் உண்மை வெளியே வந்துவிடும் என்று தெரியும். எனவே அந்தச் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு கோருகின்றேன் – என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற கொள்கை ரீதியான கோட்பாட்டு வாசகம் அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் தெளிவாக உள்ளது.

வழமையாக அரசமைப்பில் தீர்மானிக்கப்படும் கொள்கை ரீதியான அம்சங்களை நடைமுறைப்படுத்துவது எப்படி என்பது தொடர்பில் அந்த அரசமைப்பு ஏற்பாடுகளைத் தொடர்ந்து உரிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து யாக்கப்பட வேண்டும்.

உதாரணமாக நாட்டின் ஜனாதிபதி மக்களினால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவர் என அரசமைப்புக் கூறுமானால், அதன்படி அந்தத் தேர்தலை எப்படி நடத்துவது என்பது குறித்த விடயங்களை வரையறுப்பதற்காக ஜனாதிபதித் தேர்தல் சட்டம் என்ற ஒரு சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கும். அரசமைப்பு வரையறை செய்த தீர்மானங்களுக்கு அமைய அந்தத் தேர்தலை எப்படி நடத்துவது என்பதற்கான ஏற்பாடுகளை அந்தச் சட்டம் கொண்டிருக்கும். இதுதான் பொதுவான முறை.

அதன்படி –

19ஆவது திருத்தத்தின் கீழ் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றோர் ஜனாதிபதித் தேர்தலில் நிற்க முடியாது என்ற கொள்கைத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்யப்பட வேண்டி இருந்தன.

இதற்கான சட்ட வரைவு ஒரு வருடத்துக்கு முன்னரே சட்டவரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு, அது தொடர்பில் சட்டமா அதிபரிடம் பரிந்துரையும் பெறப்பட்டிருந்தது.

ஆனால், அந்த சட்டவரைவை அமைச்சரவையில் அங்கீகரித்து, நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்கும் நடவடிக்கையை எடுக்காமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுமென்றே இழுத்தடித்து வந்துள்ளார் என இப்போது செய்திகள் கசிந்துள்ளன.

இது குறித்து ஐ.தே.கட்சியின் மூத்த பிரமுகர்கள் பலர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டபோதெல்லாம், *"பார்ப்போம். அமைச்சரவைக்கு அதனைச் சமர்ப்பிக்க முன்னர், அது குறித்து ஜனாதிபதியுடன் முற்கூட்டியே பேசி அனுமதி பெறவேண்டும்."* – என்று கூறி இழுத்தடித்து வந்துள்ளாராம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்கின்றன கொழும்பு செய்தி வட்டாரங்கள்.

அரசமைப்பு நாட்டின் மீயுயர் சட்டம். அதில், இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்று கூறியிருப்பதால் அது சட்டம்தான். இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர் அத்தேர்தலில் போட்டியிட முடியாதுதான்.

ஆனால் –

அப்படி ஒருவர் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்தால் என்ன நடவடிக்கை எடுப்பது, வேட்புமனுத் தாக்கல் செய்தவர் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவரா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பவர் யார், தேர்தல் ஆணையாளருக்கு அப்படி முடிவு எடுக்க அதிகாரம் உண்டா, அதில் தேர்தல்கள் ஆணையாளர் தவறிழைத்தால் பாதிக்கப்படுவோர் நிவாரணம் பெறுவது எங்ஙனம் என்பன போன்றவற்றுக்கான விடையைத் தரவேண்டியது ஜனாதிபதித் தேர்தல் சட்டம்தான்.

ஆனால், அதில் 19ஆவது திருத்தத்தின் கொள்கை ரீதியான நிலைப்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் இன்னமும் ஜனாதிபதி தேர்தல் சட்டத்தில் சேர்க்கப்படவில்லை. சேர்க்க வேண்டிய கடப்பாடு நாடாளுமன்றத்துக்கு உரியது.

19ஆவது திருத்தம் மூலம் சில முடிவுகளை எடுத்து நாட்டின் மீயுயர் சட்டத்தில் மாற்றங்களைச் சேர்த்த இந்த நாடாளுமன்றம், அந்த முடிவுகளை நடைமுறைப் படுத்துவதற்கான சட்டத் திருத்தங்களை இன்னும் கொண்டு வரவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆனாலும் காலம் இன்னும் பிந்திவிடவில்லை.

தேர்தல்கள் ஆணையாளரினால் ஜனாதிபதித் தேர்தல் உத்தியாகபூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர், நாடாளுமன்றில் சாதாரண பெரும்பான்மை மூலம் அந்தச் சட்டத் திருத்தங்களைச் செய்து கொள்ளமுடியும்.

கோட்டாவின் இரட்டைப் பிரஜாவுரிமைச்சர்ச்சைகளை எல்லாம் கடைசி நேரம்வரை நுணுக்கமாகப் பார்த்து, அவதானித்து, உள்வாங்கிய பின்னர், அவை எல்லாவற்றுக்கும் சேர்த்து தப்பி விலக முடியாதவாறு ஒரேயடியாக ஆப்படிக்கக்கூடிய உரிய சட்ட ஏற்பாடுகளை எல்லாம் தவறாமல், கனகச்சிதமாகக் கொண்டதாக இந்தச் சட்டத்திருத்தத்தை – ஜனாதிபதி தேர்தல் சட்டத் திருத்தமாகக் கொண்டு வருவதற்காக, இறுதி நேரம் வரை பார்த்திருக்கின்றாரோ பிரதமர் ரணில்?

அரசியலில் நரித்தந்திரசாலி அல்லவா அவர்...!

- மின்னல் -

## காயங்களுடன் யானையின் சடலம்



வவுனியா, ஓக. 18

வவுனியா வடக்கு – நெடுங்கேணி, கோரமோட்டை குளக்கரையில் காயமடைந்த நிலையில் காட்டு யானையின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எல்லை கிராமமாகக் காணப்படும் கோரமோட்டை யானைகளின் சரணாலயம் போன்றே காட்சியளிக்கின்றது. இந்தக் கிராமத்தில் வேட்டைக்குச் சென்றவர்களால் அல்லது வேட்டைக்காக பயன்படுத்தப்படும் கட்டுத்துவக்கு வெடித்ததனால் யானை இறந்திருக்கலாம் எனப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களும் வன பாதுகாப்புத் துறையினரும் ஆராய்ந்து வருகின்றனர். (ஐ)

## ஜனாதிபதி வேட்பாளரை நாம் அடையாளம் கண்டுள்ளோம்

### கூறுகின்றார் நீதி அமைச்சர்



கொழும்பு, ஓக. 18

ஜனாதிபதி தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பொருத்தமான தகுதியான வேட்பாளரை கண்டுள்ளோம் எனவும், இது தொடர்பான அறிவிப்பு பொருத்தமான தருணத்தில் வெளியிடப்படும் எனவும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை பிரதேசத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஏழைகளின் வியர்வைத் துளிகளின் வாசம் அறிந்த, மண்ணோடு போராடும் மக்களின் கஷ்டங்களை உணர்ந்த ஒரு மண்ணின் மைந்தனே எமக்குத் தேவை. அவரை நாங்கள் இனங்கண்டுள்ளோம்.

இன்றைய சூழ்நிலையில் ஊடகங்கள் பலவும் பிரதமருக்கும், அரசுக்கும் எதிராக திட்டமிட்ட பொய்களையும், வதந்திகளையும் பரப்பி வருகின்றன. நாங்கள் அவர்களை பழிவாங்கவோ, அடிக்கவோ, துன்புறுத்தவோ, தீவைக்கவோ மாட்டோம். எமது பொறுப்புக்களை மக்களுக்காக நேர்மையாக நிறைவேற்றுவதே எமது கடமையாகும் – என்றார். (ஐ)

# தமிழ் மக்களின் பேராதரவு கோட்டாவுக்குக் கிடைக்கும்

## அடித்துக் கூறுகிறார் உதய கம்மன்பில



கொழும்பு, ஓக. 18

கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவு கிடைகும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. கோட்டாபய நிறைவேற்று ஜனாதிபதியாகவே செயற்படுவார் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற ஒரு கட்சி இப்போது இல்லை. அந்த இடத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மட்டுமே இப்போது எஞ்சியுள்ளது. பிரதான கட்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியே உள்ளது. இதனுடன் கூட்டணி அமைக்க ஏனைய கட்சிகளுக்கு இடமுண்டு. ஆனால் இதில் ராஜபக்ஷ கொள்கையுடன் இணையக்கூடிய நபர்களே இருக்க வேண்டும். மக்கள் இன்று ராஜபக்ஷயுகம் வேண்டும் என்று கேட்கின்றனர்.

அதனாலேயே கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கத் தீர்மானம் எடுத்துள்ளோம். இதுவரை காலமாக ஜனாதிபதியாக இருந்தவர்கள் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளனரா?

மஹிந்த மாத்திரம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். கோட்டாபய பேசிக் கொண்டு காலத்தைக் கடத்துபவர் அல்லர். அவர் சொல்வதைச் செய்து காட்டியவர். உலகில் மிகவும் மோசமான பயங்கரவாத அமைப்பான விடுதலைப்புலிகளை இரண்டரை ஆண்டுகளில் இல்லாதொழித்தார். அவர் போன்ற ஒருவர் மூலமாகவே நாட்டை மீட்டெடுக்கவும் முடியும்.

இன்று இலங்கையின் சூழல் மிகவும் மோசமானதாக உள்ளது. அசுத்தமான இலங்கையை இந்த ஆட்சியாளர்கள் உருவாக்கி வைத்துள்ளனர்.

அதேபோல் இன்று தமிழ் சிங்கள மக்கள் ஒற்றுமையை விரும்புகின்றனர். முஸ்லிம் பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும் எனத் தமிழ் சிங்கள மக்கள் விரும்புகின்றனர். அதேபோல் அடுத்த ஜனாதிபதிக்கும் இப்போதுள்ள ஜனாதிபதிக்குள்ள சகல அதிகாரங்களும் இருக்கும். கோட்டாபய நிறைவேற்று ஜனாதிபதியாகவே செயற்படுவார். அதில் எந்த சந்தேகமும் இல்லை – என்றார். (ஐ)

# சு.கவும் வேட்பாளரை நிறுத்துவது அவசியம்!

## கூறுகின்றார் தயாசிறி



கொழும்பு, ஓக. 18

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தவேண்டுமென்றால் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டியது அவசியம் என்று, கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி நடைபெறவுள்ள சு.கவின் 68ஆவது தேசிய மாநாடு தொடர்பில் விசேட பேச்சு கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட பல சிரேஷ்ட தலைவர்கள் இந்தப் பேச்சில் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சு.கவின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர,

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது குறித்து இன்னமும் சு.க. தீர்மானிக்கவில்லை. கட்சியின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் வேலைத்திட்டங்களைச் செய்து வருகின்றோம். என்றாலும், தற்போதைய சூழ்நிலையில் கட்சியை வலுப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதற்கு முதலில் கட்சியின் யாப்பை மீறிச் செயற்பட்டுள்ளவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்பதற்கு அவசரப்படவேண்டிய அவசியமில்லை. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வரைக்கும் காலம் உள்ளது. இந்தத் தருணத்தில் சு.கவை பலப்படுத்த ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் தேவை எழுந்துள்ளது – என்றார்.

# காசல்ரீ நீர்த்தேக்கத்தில் சடலம்

கொழும்பு, ஓக. 18

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் சடலமொன்று கரையொதுங்கியுள்ளது.

காசல்ரி நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங்கும் டிக்கோயா ஆறு சங்கமிக்கும் வனராஜா பகுதியில் ஒதுங்கிய இந்தச் சடலம் குறித்து விசாரணை நடத்த பொலிஸார் அங்கு விரைந்துள்ளனர்.

நீர்த்தேக்கத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்களே சடலத்தைக் கண்டு ஹற்றன் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். (ஐ)

# தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தாதீர்!



## ஜனாதிபதி மைத்திரி கோரிக்கை

கொழும்பு, ஓக. 18

தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படும் வகையிலான – பொருத்தமற்ற கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன் தினம் இராணுவத்தின் விசேட படையணிக்கு ஜனாதிபதி மற்றும் ரெஜிமென்ட் வர்ண விருது விழாவில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைக் கூறினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, ' குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தாய் நாட்டினதும் மக்களினதும் எதிர்காலம் பாதிக்கப்படத்தக்க கருத்துக்களை எவரும் வெளியிடக் கூடாது – என்றார்.

தேசிய பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துக்காக முப்படையினர் உள்ளிட்ட பாதுகாப்புத் துறையினர் ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டிய ஜனாதிபதி, ஒட்டுமொத்த தேசமும் என்றும் படையினருக்குக் கடமைப்பட்டுள்ளதாகக் கூறினார்.

கீழ்த்தரமான அரசியல் தேவைகளுக்காகப் படையினரின் அளப்பரிய சேவையைக் குறைத்து மதிப்பிட இடமளிக்க முடியாதெனவும், அன்று இராணுவத்துக்குத் தலைமைத்துவத்தை வழங்கியவர்களே இன்று குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கமைய அத்தகைய முறையற்ற கருத்துக்களை வெளியிடுதல் தொடர்பில் தான் பெரிதும் கவலையடைகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது அரசு பாதுகாப்புத் துறையினருடன் இணைந்து தேசிய பாதுகாப்பை உயரிய அளவில் உறுதி செய்திருப்பதோடு மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இலங்கையில் இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ஐ)



YOGIS
Institute of Beauty Therapy, Hair Dressing
& Home Science (Pvt) Ltd

குறுகிய கால அழகுக்கலைப் பயிற்சிகள்,
கேக் ஐசிங் பயிற்சிகள்
புதிய வகுப்புக்கள் 17.08.2019 ஆரம்பமாகவுள்ளன.
சேர விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

மகளிருக்கான GYM Exercise நடைபெறுகிறது.
இல. 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 716 4923, 021 222 2796


LATHA TAILORING & EMBROIDERY DESIGNING
SAREE BLOUSE
EMBROIDERY WORK
WOMEN'S & MENS ALTERATION
COUSTUMES
CHUBIDAR & MORE AVAILABLE



Unit 8 Champion Mall
495 High Road
Wembley HAO 2DH
Tel:07459 078 919

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## மைத்திரிக்கு ஒரு சந்தர்ப்பம்

**தனது ஆட்சியின் முடிவுக் காலத்திலாவது ஒரு சமூகக் கொரூரம் பற்றிய உண்மை நிலைமையைத் தனது கவனத்துக்குக் கொண்டு வந்து அது பற்றிய கவலையை வெளிப்படுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**இலங்கையில் கடந்த 42 வருடங்களாக மரணதண்டனை நிறைவேற்றப்படவில்லை. அதை நிறுத்தியமை மூலம் இலங்கையை இக்காலத்தில் வழி நடத்திய நாட்டுத் தலைவர்கள் இந்தத் தீவையும் நவநாகரிக உலகத்தின் நீதியான பண்பியல்புக்குள் அழைத்துச் செல்ல முயன்றார்கள்.**

**ஆனால், அதை முறியடிக்க முற்பட்டார் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**போதைப்பொருள் விற்பனை, பாவனை போன்றவற்றுக்கு எதிராகப் போராடிய ஒரே தலைவன் என்ற நற்பெயரைத் தாம் தேடி ஈட்டுவதற்காக, மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவதைத் தாமே முன்னின்று நகர்த்த முயன்றார்.**

**ஆனால், நல்ல காலம் சட்டத்துறை நடவடிக்கைகள் மூலம் – நீதித்துறை உத்தரவுகள் மூலம் – அதனைத் தற்காலிகமாகத் தடுக்க இயன்றிருக்கின்றமை நம் தேசத்தின் அதிர்ஷ்டமே.**

**இல்லையேல் மரணதண்டனை முறைமையை மீண்டும் நிறைவேற்றிய குற்றத்துக்காகவும் இலங்கைத் தீவு மனிதப் பண்பியல்புகளற்ற, காட்டுமிராண்டித்தனமான, அநாகரிகப் போக்குடைய ஒரு நாடாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும்.**

**போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்திய சாதனையாளர் என்ற பெயரைச் சுவீகரிப்பதற்காக – அவ்விடயத்தில் தாம் ஒரு இரும்பு மனிதர் என்று படம் காட்டுவதற்காக – தன்னிச்சையாக – தம்மிஷ்டப்படி – மீண்டும் மரண தண்டனை முறையை நடைமுறைக்குக் கொண்டுவர முயன்று அதனால் மோசமான விமர்சனத்துக்கும் கண்டனங்களுக்கும் உள்ளானவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**இப்போது அவர் பிறிதொரு முக்கியமான சமூகப் பிரச்சினை குறித்துக் குரல் எழுப்பியிருக்கின்றார். அது நிச்சயம் அவர் குறிப்பிடுகின்ற மாதிரி ஊன்றிக் கவனித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய ஒன்றே.**

**நாட்டின் உயர் கல்வி பீடங்கள் என்று கூறப்பட்டிருக்கின்ற பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் கல்வியறிவற்ற மூடர்களின் 'ராகிங்' நடவடிக்கையே அவர் சுட்டிக்காட்டும் மோசமான சமூகச் சீரழிவாகும்.**

***"பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களில் இருபது வீதத்தினர் 'ராகிங்' கொரூரங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் பல்கலைக்கழகக் கல்வியை கைவிடுகின்றனர்"*** **என்று வேதனையுடன் சுட்டிக் காட்டுகின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

***"ராகிங்கினால் பாதிக்கப்படுகின்ற பலர் மனோதத்துவ ரீதியாக வாழ்க்கை முழுவதும் குழப்பமுள்ளவர்களாக மாறுகின்றனர். மிக மோசமான – உடந்தீங்கை ஏற்படுத்துகின்ற – ராகிங் நடவடிக்கைகளினால் பாதிக்கப்படுவோர் வாழ்க்கை முழுவதும் வலது குறைந்தவர்களாகவும் மாறும் அவலமும் உள்ளது.***

***"கல்வி கற்ற சமூகம் ஒன்றை நாம் உருவாக்குகின்றோம் என்று கூறுகிறோம். இதுதானா அத்தகைய சமூகத்தை உருவாக்கும் வழிமுறை? இந்தக் கொரூரங்களை இழைக்கின்ற கல்விச் சமூகத்திடம்தானா நாம் எமது நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைக்கப் போகின்றோம்?***

***"பல்கலைக்கழகத்துக்கு நுழையும் புதுமுக மாணவர்கள் மீது இத்தகைய கொரூரத்தைப் புரிவதன் மூலம் சிரேஷ்ட மாணவர்கள் என்ன இன்பத்தை – களிப்பை – பெறுகின்றார்கள்?***

***"புதுமுக மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் 'ராகிங்' என்ற பெயரில் புரியும் கொரூரங்கள் பற்றிய சில படங்களை எனக்குக் காட்டினார்கள். நான் அதிர்ந்து போனேன். அவை காட்டுமிராண்டித்தனத்தின் உச்சம். அப்படிக் குரூரத் தன்மையை வெளிப்படுத்துபவையாக அந்தப் படங்கள் இருக்கின்றமையால் அவற்றை நான் பகிரங்கப்படுத்த முடிய வில்லை."*** **– என்று அதிர்ச்சி மற்றும் வேதனையுடன் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**சமூகத்திலிருந்து, என்ன விலை கொடுத்தாவது களையப்பட வேண்டிய மிக முக்கியமான பிரச்சினை இந்த ராகிங் கொரூரம்.**

**நாகரிக உலகுக்கு – மனிதப் பண்பியல்புகளுக்கு – முற்றிலும் மாறான சமூகச் சீரழிவு இந்த ராகிங் நடவடிக்கை. முளையிலே கிள்ளி எறியப்பட வேண்டிய குரூரக் குற்றம் இந்தச் செயற்பாடு.**

**கற்றறிந்த – படித்த – கட்டமைப்பு என்று அழைப்பதற்கே லாயக்கற்றது பல்கலைக்கழகச் சமூகம் என்று கருதுவதற்குக் காரணமாக அமைவதும் இந்த ராகிங் அசுரன்தான்.**

**'ராகிங்' தொடர்பாகத் தாம் அவதானித்த மோசமான நிலைமையின் அடிப்படையில் அந்தக் கொரூரத்தைக் கற்றறிந்த நமது கல்விச் சமூகமான பல்கலைக்கழக மட்டத்திலிருந்து நிரந்தரமாகத் துடைத்தெறிந்து அழிப்பதற்கு, தமக்கு எஞ்சியுள்ள இரண்டு, மூன்று மாத பதவிக் காலத்துக்குள் காத்திரமான நடவடிக்கையை ஜனாதிபதி சிறிசேன எடுப்பாராயின், நமது கல்விச் சமூகம் காலம் காலமாக அவரை மதித்துப் போற்றும் என்று கருதுகிறோம். நம்புகிறோம்.**

# இந்தியாவிலும் இலங்கையிலும் ஐ.எஸ். அமைப்பின் தடங்கள்!



ஈராக் மற்றும் சிரியாவில் தமது செல்வாக்கு வெகுவாக குறைந்து விட்டதால், இந்தியா, இலங்கை, துருக்கி, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் ஐ.எஸ் பயங்கரவாதக் குழு காலடி எடுத்து வைத்துள்ளதாக, ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவைத் தளமாக கொண்டு செயற்படும், முரண்பாடுகள் , மோதல்களைக் கண்காணிக்கும் முன்னணி அமைப்பான ஏ.சி.எல்.ஈ.டியினால் (Armed Conflict Location and Event Data - ACLED) வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் இடம்பெற்றுள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஐ.எஸ். அமைப்பு மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டு, மேற்கு ஆசியாவுக்கு வெளியே முதன்முறையாக அதைவிட அதிகமான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவில் 2018இல் அதன் நிலப்பரப்பை இழந்த ஐ.எஸ். அமைப்பு, 2019 இல் உலகளாவிய இருப்பை விரிவாக்கியுள்ளதாகவும், அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல் ஐந்து மாதங்களில், ஐ.எஸ். அமைப்பு அதன் உலகளாவிய நடவடிக்கைகளுக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் முக்கியத்துவம் அளித்துள்ளது.

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளுக்குப் பின்னர், ஐந்து ஆண்டுகளில் முதல் முறையாக வெளியிட்ட காணொலியில் ஜிஹாதி தலைவர் அபுபக்கர் அல் – பாக்தாதி, பெரும்பாலும் தெற்காசியா, வடக்கு, மேற்கு மற்றும் மத்திய ஆசியாவில் ஐ.எஸ். குழுவின் செயல்பாடுகளில் கவனம் செலுத்தியிருந்தார் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# சு.கவுக்குப் புத்துயிரூட்ட புறப்படுகிறார் சந்திரிகா



கொழும்பு, ஓக. 18

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனது தந்தையினால், நிறுவப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் புத்துயிர் கொடுக்கத் தயாராக உள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

ஏனைய கட்சிகளால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கையாளப்படுவதாக தெரிவித்துள்ள சந்திரிகா, கட்சியைப் புதுப்பிக்கப் போவதாகக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

சந்திரிகா குமாரதுங்க கடந்த வியாழக்கிழமை சுதந்திரக் கட்சி தலைமையகத்துக்குச் சென்று பல்வேறு உயர்மட்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது, கட்சியின் தற்போதைய அவல நிலைக்கு, தனக்குப் பின்னர் கட்சியைப் பொறுப்பேற்ற தலைவர்களே காரணம் என்றும் விமர்சித்தார்.

கட்சிக்குப் புத்துயிர் அளிக்கும் திட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை தொடங்குவதாக அறிவித்த சந்திரிகா குமாரதுங்க, தனக்கும் தனது பணியாளர்களுக்கும், சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் உடனடியாக ஒரு தனிச் செயலகம் ஒதுக்கப்படவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

அவரது இந்தக் கோரிக்கை கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் ஒழுக்கத்தை மீறியதற்காக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தவறிய சு.க. பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகரவையும், சந்திரிகா குமாரதுங்க குற்றம்சாட்டியுள்ளார். (ஐ)

# இரணைமடுவில் நீர் வற்றியமையால் குடிதண்ணீர் வழங்குவதில் நெருக்கடி



கிளிநொச்சி, ஓக. 18

கிளிநொச்சி மாவட்ட நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மூலம் 17 கிராம அலுவலர் பிரிவுகளுக்குக் குழாய் வழி மூலம் வழங்கப்பட்டு வரும் குடிதண்ணீர் விநியோகத்தில் தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனச் சபையின் மாவட்ட பொறியிலாளர் என். நவரூபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இரணைமடுகுளத்தில் இருந்து இடது கரை வாய்க்கால் மூலம் கிளிநொச்சிக் குளத்துக்கு நீர் பெறப்பட்டு அங்கிருந்து எடுக்கப்படும் நீர் சுத்திகரிக்கப்பட்டு 17 கிராம அலுவலர் பிரிவுகளில் குழாய் வழி குடிதண்ணீர் விநியோகமும், மேலும் பல கிராமங்களுக்கு நீர்த்தாங்கிகள் மூலம் நீர் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆனால் தற்போது இரணைமடுக் குளத்தில் நீர் மட்டம் ஒன்பது அடிக்கு கீழ் காணப்படுவதால் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் வழங்கப்படும் குடிதண்ணீர் விநியோகத்தில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு தற்போது இரண்டு நாளைக்கு ஒரு தடவை நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இந்த வறட்சியான நிலைமை நீடித்தால் அது மூன்று நாளைக்கு ஒரு தடவையாக மாற்றப்படும்.

700 மீற்றர் கியூப் நீர் பெறப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது 350 மீற்றர் கியூப் நீர் பெறப்பட்டுச் சுத்திகரிக்கப்படுகிறது.

குளத்து நீர் அடி மட்டத்துக்குச் சென்றுவிட்டமையால் நீர் மிக மோசமாகக் கலங்கிய நிலையில் காணப்படுகிறது. இதனை பெற்றே சுத்திகரிக்கின்றோம். எனவே பொதுமக்கள் நீரை கொதிக்க வைத்து குடிக்கவேண்டும் – என்றார். (ஐ)

**நாளை** 19.08.2019 திங்கட்கிழமை
நட்சத்திரம்: உதயாதிட்டாதி மு.இ 7.06 வரை
திதி : சதுர்த்தி பி.இ 1.44 வரை
இராகுகாலம் : 7.35 – 9.05
சுப நேரம் : 12.05 – 1.35
சங்கடஹர கணபதி விரதம்

# பிரதமரின் உத்தரவை நடைமுறைப்படுத்தாத வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள்!

*(எஸ்.நிதர்ஷன்)*

*யாழ்ப்பாணம், ஓக. 18*

*வடமராட்சி கிழக்குப் பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட 5765 ஹெக்ரேயர் நிலப்பகுதிக்கான வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய உத்தரவை 6 மாதங்களாக மேற்படி திணைக்களம் நடைமுறைப்படுத்தாமல் இருந்துள்ளது.*

நாகர்கோவில் கிழக்குப் பகுதியில் சுமார் 1237 ஹெக்ரேயர் நிலப் பகுதியையும் சுண்டிக்குளம் பகுதியில் 4528 ஹெக்ரேயர் நிலப்பகுதியையும் வனஜீவராசிகள் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது. இந்த விடயம் கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனால் பிரதமரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இந்த நிலப் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன எனச் சுட்டிக்காட்டியதுடன் மக்களின் விவசாய நிலங்கள், மீன்பிடிக்கும் இடங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் குடியிருப்புக்கள் இவற்றுக்குள் அடக்கப்பட்டுள்ளதாகவும் சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் அந்தப் பகுதியைக் கையகப்படுத்துவதற்காக வனஜீவராசிகள் திணைக்களம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறுமாறு பிரதமர் திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.

இந்நிலையில் அதே விடயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன் தினம் யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதற்காக அந்த வர்த்தமானி அறிவித்தல் மீளப் பெறப்படவில்லை? என பிரதமர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்க முடியாமல் திணறிய திணைக்கள அதிகாரி, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் உள்ளிட்ட சில திணைக்களங்களின் அனுமதி வேண்டும் எனக் கூறினார்.

ஆனால் அவ்வாறன அனுமதி வர்த்தமானி அறிவித்தல் செய்வதற்கே தேவை. அதனை மீளப் பெறுவதற்கு எதுவும் தேவையில்லை என பிரதமர் ரணில் கூறியதுடன், உடனடியாக அந்த வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறவேண்டும் என இரண்டாவது தடவையாக வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதற்கிடையே, வனஜீவராசிகள் திணைக்களத்தின் விடயம் பேசப்படுகையில் கோபமடைந்த வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன், வடமராட்சி களப்பு குடிதண்ணீர்த் திட்ட விடயத்திலும் இந்த திணைக்களம் மிக மோசமாக நடந்து கொண்டதாகவும், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அனுப்பப்பட்ட செயற்றிட்டம் தொடர்பான விடயங்களைச் சிங்கள மொழியில் தருமாறு தன்னிடம் கேட்டதாகவும் கூறியதுடன் வடக்கு மாகாணத்தில் எதற்காகச் சிங்கள மொழியில் தரவேண்டும் எனக் கேட்டுக் கடும் கோபமடைந்தார். பிரதமர் ரணில் குறுக்கிட்டு அவரை ஆற்றுப்படுத்தினார். (ஐ - 07)

# வீட்டுத் திட்டத்தின் பயனாளிகளை 5 மணி நேரம் காக்க வைத்த ரணில்!

## 5 நிமிடத்தில் நிகழ்வை முடித்து வெளியேறினார்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், ஓக. 18

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்காகப் பயனாளிகளும் பொதுமக்களும் 5 மணித்தியாலங்கள் காத்திருந்த நிலையில் - அங்கு வந்த பிரதமர் உள்ளிட்ட அதிதிகள் 5 நிமிடங்களில் நிகழ்வை முடித்துக்கொண்டு வெளியேறினர்.

இதனால் இதில் கலந்துகொண்ட பலரும் விசனம் வெளியிட்டனர்.

இந்தச் சம்பவம் வடமராட்சியில் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட உடுப்பிட்டிப் பகுதியில் அமைக்கப்பட்ட புதிய வீடுகள் கையளிப்பு மற்றும் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு என்பன நேற்று முன் தினம் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறுமெனப் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் பயனாளிகள் மற்றும் மக்களைக் காலை 8.30 மணி முதல் 9 மணிக்கு முன்னதாக வருமாறும் அழைப்பு விடப்பட்டிருந்தது.

இதற்கமைய அந்த நேரத்துக்கு வந்த பொதுமக்கள் மற்றும் பயனாளிகள் பாதுகாப்புச் சோதனைகளின் பின்னர் நிகழ்வு நடைபெறும் இடத்துக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

ஆயினும் நிகழ்வு ஆரம்பமாகுமெனக் குறிப்பிட்ட முற்பகல் 11 மணிக்குப் பிரதமர் உள்ளிட்ட அதிதிகள் வருகை தரவில்லை. இதனால் அங்கிருந்த பலரும் கடும் விசனமடைந்திருந்தனர். பிற்பகல் இரண்டு மணிக்குப் பிரதமர் உள்ளிட்ட அதிகாரிகள் நிகழ்வு நடைபெறும் இடத்துக்கு வந்து நிகழ்வை ஆரம்பித்தனர்.



இதன்போது வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல்லைப் பிரதமர் திரை நீக்கம் செய்து வைத்ததுடன் புதிதாக அமைக்கப்பட்ட வீடுகளையும் நாடா வெட்டித் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து அந்த வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கான காணி உறுதிப் பத்திரங்களையும் பிரதமர் வழங்கினார்.

இந்த நிகழ்வுக்காகக் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை சுமார் ஐந்து மணி நேரம் பயனாளிகளும் பொதுமக்களும் காத்திருந்த நிலையில் நிகழ்வை ஐந்து நிமிடங்களில் முடித்துவிட்டு பிரதமர் உள்ளிட்ட குழுவினர் சென்றிருந்தமை குறித்து நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்த பலரும் கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தனர். (ஐ - 07)

# தமிழர்கள் துணையுடன் ஆட்சிமாற்றம் நிச்சயம்!

## மஹிந்த தரப்பினர் நம்பிக்கை

கொழும்பு, ஓக. 18

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஒட்டுமொத்த தமிழ் மக்களின் ஆதரவுடன், ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்களின் ஆதரவை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பெற முடியாது என்ற தவறான கருத்தை அரசு தற்போது குறிப்பிட்டுக் கொள்கின்றது. நிச்சயம் வடக்கு - கிழக்கு உட்பட ஒட்டுமொத்த தமிழ் மக்களின் ஆதரவுடன் ஆட்சி மாற்றம் ஏற்படும். வடக்கு மக்கள் தற்போது எவர் தலைமையிலான ஆட்சி சிறந்தது என்பதைத் தீர்மானித்து விட்டார்கள்.



தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் எவரும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. மாறாக தேவையற்ற - நிறைவேறாது என்று தெரிந்த ஒரு விடயத்துக்கு முக்கியத்துவம் வழங்கிக் காலத்தை வீணடித்து தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றார்கள்.

அரசியல் தீர்வு என்ற விடயத்தை குறிப்பிட்டுக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகின்றது. ஆதரவு வழங்குவதால் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மாத்திரமே பெரிதும் பயனடைந்துள்ளார்கள். ஆனால் எதிர்பார்ப்புடன் அபிவிருத்திகள் ஏதும் பெற்றுக் கொள்ளாத வடக்குத் தமிழ் மக்கள் தொடர்ந்து ஏமாற்றமடைந்துள்ளார்கள். இறுதியில் அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் வெறும் கானல்நீராகவே காணப்படும்.

தமிழ் மக்கள் தொடர்ந்து தம்மை ஏமாற்றி அதில் சொகுசாக வாழும் அரசியல்வாதிகளுக்கு ஆதரவு வழங்குவதால் எவ்வித பயனும் ஏற்படாது. கடந்த நான்கு வருடகாலமாக அரசில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் வெறும் பேசுபொருளாகவே காணப்பட்டன. நிச்சயம் எமது அரசில் பாதிப்பற்ற விதத்தில் வடக்குக்குத் தீர்வும் மலையக மக்களுக்கு பொருளாதாரத் தீர்வும் பெற்றுக் கொடுக்கப்படும் - என்றார். (ஐ)

## பிரிகேடியர்களாக 31 பேருக்கு பதவியுயர்வு

கொழும்பு, ஓக. 18

இலங்கை இராணுவத்திலுள்ள கேணல் பதவியிலுள்ள 31 படை அதிகாரிகள் பிரிகேடியர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர் என இராணுவம் அறிவித்துள்ளது.

இராணுவத் தளபதியின் பரிந்துரையின் கீழ் ஜனாதிபதியினால் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 30 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

# விக்கியை களத்தில் இறக்க ஆர்வம் காட்டும் வாசுதேவ

*கொழும்பு, ஓக. 18*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக வடக்கு முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் போட்டியிட்டால் கூட்டமைப்புக்கு கிடைக்கும் வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்காமல் போகும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.*

*கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில் -*

*விக்னேஸ்வரன் போட்டியிட்டால் கூட்டமைப்புக்குக் கிடைக்கும் வாக்குகள் குறிப்பிடத்தக்களவு குறைவடையும். எனவே, விக்னேஸ்வரன் போட்டியிட்டால் பொதுஜன பெரமுனவின் வாக்கு வங்கி குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும். ஆனால் வினேஸ்வரன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தற்போது சமூகத்தில் கதையொன்று மாத்திரமே நிலவுகிறது- என்றார்.*

*(ஐ)*

# பயங்கரவாதத்தை நிறுத்தினால் மட்டுமே பாக். தரப்புடன் பேச்சு என்கிறது இந்தியா



நியூயோர்க்,ஓக.18

காஷ்மீர் விவகாரம் முற்றிலும் இந்தியாவின் உள் விவகாரம் என்று ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி கூறினார்.

காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கிய 370 ஆவது சட்டப்பிரிவை இந்தியா ரத்து செய்தது. காஷ்மீரை 2 யூனியன் பிரதேசங்களாக பிரித்துள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

கடந்த 9 ஆம் திகதி பாகிஸ்தான் வெளியுறவுத்துறை மந்திரி ஷா மஹ்மூத் குரேஷி, சீனாவுக்கு சென்று ஆதரவு கோரினார். தங்களது நிலைப்பாட்டுக்கு சீனா ஆதரவு தெரிவித்தது என அவர் கூறினார்.

இதையடுத்து, காஷ்மீர் விவகாரம் பற்றி ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் ஆலோசனை நடத்த வேண்டும் என்றும் சீனா கோரிக்கை விடுத்தது. இதன்படி, ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் மூடிய அறைக்குள் இந்த விவகாரம் குறித்து ஆலோசனை நடத்தியது. இந்த கூட்டத்தில் பாகிஸ்தானுக்கு சீனா மட்டுமே ஆதரவு தெரிவித்தது. இதனால், காஷ்மீர் விவகாரத்தில் சர்வதேச கவனம் பெற முயன்ற பாகிஸ்தானின் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

இந்தக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த ஐ.நாவுக்கான இந்தியா தூதர் சையது அக்பருதின் கூறியவை வருமாறு:-

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து ரத்து செய்தமை முற்றிலும் இந்தியாவின் உள்விவகாரம். காஷ்மீரில் அபாயகரமான சூழல் இருப்பதாக சிலர் தங்கள் கருத்தை சர்வதேச நாடுகளின் கருத்தாக எதிரொலிக்கச் செய்வதற்கு முயற்சி செய்கிறார்கள்.

வருமுன் காப்பதே சிறந்தது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காஷ்மீரில் நாங்கள் கட்டுப்பாடுகள் விதித்தோம். ஜம்மு காஷ்மீரில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்படும். பாகிஸ்தான் பயங்கரவாதத்தை கைவிட்டால் மட்டுமே அமைதி பேச்சு நடத்த முடியும் - இவ்வாறு அவர் கூறினார்

# காஷ்மீர் விவகாரத்தில் ஐ.நா. தலையீடு அவசியமற்றது என்று ரஷ்யா வலியுறுத்து

## பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டத்தில் தெரிவிப்பு



காஷ்மீர் விவகாரத்தில் ஐநா தலையிடக்கூடாது என்று ரஷ்யா வலியுறுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

காஷ்மீரில் இந்தியா மேற்கொண்ட மாற்றங்கள் குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலை அவசரமாகக் கூட்ட வேண்டும் என்று கவுன்சிலின் தலைவர் ஜோயன்னா ரானெக்காவுக்கு பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் குரேஷி கடிதம் எழுதினார். ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலை கூட்ட வேண்டும் என்ற பாகிஸ்தானின் கோரிக்கையை அதன் நட்பு நாடான சீனா ஆதரித்தது. பாகிஸ்தானின் கோரிக்கைப்படி, ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலைக் கூட்டுமாறு அதன் தலைவரை சீனா கேட்டுக் கொண்டது.

இந்நிலையில், பாகிஸ்தான், சீனா ஆகியவற்றின் கோரிக்கையை ஏற்று, ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. மூடிய அறைக்குள் இரகசியமாக நடைபெற்ற இந்த ஆலோசனையில், ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்த உறுப்புரிமை கொண்டிருக்கும் பிரிட்டன், சீனா, ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் 10 தற்காலிக உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை.

இந்தக் கூட்டத்தில் ஜம்மு காஷ்மீர் பிரச்சினையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் தலையிடக்கூடாது என்று நிரந்தர உறுப்பினர்களில் ஒன்றான ரஷ்யா தெரிவித்தது. மேலும், இந்த விவகாரத்தில், இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு நடத்தித் தீர்வுகாண வேண்டும் என்றும் ரஷ்யா வலியுறுத்தியதாக தகவல்கள் கூறுகின்றன.

# காஷ்மீர் பதற்றத்தைத் தணிக்க இந்தியா - பாக். பேச வேண்டும்

## அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவிப்பு

காஷ்மீர் விவகாரம் குறித்து இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு நடத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்ட விவகாரத்தில் பாகிஸ்தான் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இது தொடர்பாக இந்தியாவுக்கு எதிராக உலக நாடுகளை ஒருங்கிணைக்கும் முயற்சியை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் மேற்கொண்டு உள்ளார்.

அந்த வரிசையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்புடன் நேற்று முன்தினம் அவர் தொலைபேசியில் பேசினார். அப்போது, 'காஷ்மீரில் இந்தியா மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தானின் கவலையை வெளியிட்ட அவர், இந்த நடவடிக்கை பிராந்திய அமைதிக்கு பங்கம் விளைவிப்பதாக இருக்கும்' என்றும் கூறினார்.

இந்த உரையாடலின் போது, அமெரிக்க அதிபர் டிரம்ப், ஜம்மு காஷ்மீர் விவகாரத்தால் இருநாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பதற்றத்தை இருநாடுகளும் பேச்சு நடத்தித் தணிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார் என வெள்ளை மாளிகையின் ஊடகத் துணை செயலர் ஹோகன் கிட்லி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில், காஷ்மீர் விவகாரம் குறித்து ஆலோசனை நடைபெறும் முன் இரு தலைவர்களும் தொலைபேசியில் பேசினர் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், ஐ.நா. கூட்டம் முடிந்த பிறகே, இந்த தகவல் வெள்ளை மாளிகையால் வெளியிடப்பட்டது.

# மீண்டும் நாற்பது ஆண்டு கால ஜலவாசத்துக்காக அனந்தசரஸ் குளத்தில் உறைந்தார் அத்திவரதர்!

## வெளியே வந்த 47 நாள்களில் ஒரு கோடி பக்தர்கள் தரிசனம்







காஞ்சிபுரம்,ஓக.18

காஞ்சிபுரம் அத்திவரதரை கடந்த 47 நாள்களில் ஒரு கோடி பேர் தரிசித்து உள்ளனர். தரிசனம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, அத்திவரதர் சிலை நேற்று மீண்டும் கோவில் குளத்துக்குள் வைக்கப்பட்டது.

கோவில் நகரமான காஞ்சிபுரத்தில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக விளங்கும் வரதராஜப் பெருமாள் கோவில் உள்ளது.

இந்தக் கோவிலில் உள்ள அனந்தசரஸ் குளத்துக்குள் இருந்து 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளிக்கும் அத்திவரதர் வைபவம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

அந்த வகையில் கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அங்குள்ள வசந்த மண்டபத்தில் அத்திவரதர் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளித்தார். ஜூலை 31 ஆம் திகதி வரை சயன கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த அத்திவரதர், பின்னர் கடந்த முதலாம் திகதி முதல் நின்ற கோலத்தில் காட்சி அளித்தார்.

வாழ்க்கையில் அபூர்வமாகக் கிடைக்கும் தரிசனம் என்பதால் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மட்டுமல்லாது ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகம், கேரளா, மராட்டியம் போன்ற வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் திரளாக வந்து அத்திவரதரை தரிசித்தனர். அத்திவரதரை சயன கோலத்தில் 43 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

அப்படித் தரிசனம் செய்தவர்களில் பலர், அவர் நின்ற கோலத்தில் அருள்பாலித்த போதும் அவரை தரிசிப்பதற்காக வந்தனர். பொது தரிசன வரிசையில் பல மணி நேரம் காத்து நின்று மக்கள் அத்திவரதரைத் தரிசனம் செய்தனர்.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்கள், கலையுலகைச் சேர்ந்தவர்கள் என ஏராளமான முக்கிய பிரமுகர்களும் வந்து அத்திவரதரை தரிசித்தனர்.

முதல் 4 நாள்கள் கூட்டம் ஓரளவு தான் இருந்தது. அதன் பின்னர் தினமும் அத்திவரதரை தரிசிக்க வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்க தொடங்கியது. விடுமுறை நாள்களில் கூட்டம் கட்டுக் கடங்காமல் இருந்தது. அதிகபட்சமாக 5 லட்சம் பேர் வரை ஒரு நாளில் தரிசனம் செய்து இருக்கின்றனர்.

தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வந்ததால் காஞ்சிபுரம் நகரமே விழாக்கோலம் பூண்டது. விடுமுறை நாள்களில் கட்டுக்கடங்காத பக்தர்கள் திரண்டனர்.

கடைசி மற்றும் 47ஆவது நாளான நேற்று முன்தினம் அத்திவரதருக்கு ரோஜா மற்றும் மஞ்சள் நிற பட்டாடை உடுத்தி அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது. அதிகாலை 5.45 மணிக்கு நடை திறக்கப்பட்டு கடைசி நாள் தரிசனத்துக்காக பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

கடைசி நாளான அன்றும் அத்திவரதரைத் தரிசனம் செய்வதற்காக காலை முதலே லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டனர். இதனால் கூட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் திணறினார்கள்.

முக்கிய பிரமுகர்களுக்கான தரிசனம் வியாழனன்று முடிவுக்கு வந்ததால், நேற்று முன்தினம் பொது தரிசனம் வழியாக மட்டுமே பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். .

கடைசி நாளான வெள்ளியன்று மட்டும் இரவு 9 மணி வரை சுமார் 4 லட்சம் பக்தர்கள் அத்திவரதரைத் தரிசித்தனர் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இரவு 9 மணி அளவில் ராஜகோபுர வாசல் மூடப்பட்டது. அப்போது கோவில் வளாகத்திற்குள் காத்திருந்த பக்தர்கள் மட்டும் அத்திவரதரைத் தரிசிக்க அனுமதிக்கப்பட்டனர். இரவில் நீண்ட நேரம் தரிசனம் நீடித்தது. வெள்ளி இரவுடன் அத்திவரதர் தரிசனம் நிறைவடைந்தது.

வெள்ளி வரை அத்திவரதரை தரிசித்த பக்தர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை தாண்டிவிட்டதாக இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று (சனிக்கிழமை) அதிகாலை அத்திவரதருக்கு பரிகார பூஜை நடந்தது. அடுத்த 40 ஆண்டுகளுக்கு சிலைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் சாம்பிராணி தைலம் உள்ளிட்ட மூலிகைத் திரவியங்கள் அத்திவரதர் சிலைக்கு பூசப்பட்டன.

நேற்று இரவு 10 மணியில் இருந்து 12 மணிக்குள் அத்திவரதர் சிலை அனந்தசரஸ் குளத்துக்குள் வைக்கப்பட்டது. குளத்தில் உள்ள அத்திவரதர் மண்டபத்தின் கீழ் உள்ள அறையில் அத்திவரதர் சிலை வைக்கப்பட்டதும் குளத்தில் வழக்கம் போல் நீர் நிரப்பப்படுகிறது.

அனந்தசரஸ் குளத்தில் ஜலவாசம் செய்யும் அத்திவரதர், 40 ஆண்டுகளுக்கு பிறகு 2059 ஆம் ஆண்டு மீண்டும் அருள்பாலிக்க வெளியே வருவார்.

# யாராலும் வெல்ல முடியாத திறன்களைப் பெற்று விளங்குகின்றதாம் வடகொரியாவின் ராணுவம்

## அந்நாட்டு அதிபர் பெருமிதம்



யாராலும் வெல்ல முடியாத திறன்களை வடகொரிய இராணுவம் பெற்று விளங்குவதாக அந்த இராணு வத்தை அந்நாட்டு அதிபர் புகழ்ந்தார் எனக் கூறப் படுகிறது.

அமெரிக்காவும், தென் கொரியாவும் இராணுவ கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுகின் றமையைத் தங்கள் நாட்டிற்கு எதிரான படையெடுப்புக்கான ஒத்திகை என்று வட கொரியா கருதுகிறது. ஒவ்வொரு முறை அந்த நாடுகள் பயிற்சியில் ஈடுபடும் போதும் வடகொரியா தனது ஆயுத பலத்தை பயன் படுத்தி எச்சரிக்கை செய்வது வழக்கம்.

இந்த நிலையில், கடும் எதிர்ப்பையும் மீறி, அமெரிக்காவும், தென் கொரியாவும் கொரிய தீபகற்பத்தில் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டு வருவது வடகொரியாவை ஆத்திர மூட்டியுள்ளது. கூட்டுப் பயிற்சியை எச்ச ரிக்கும் விதமாக, இந்தத் தடவை 5 முறை ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தி யது வடகொரியா.

நேற்று முன்தினம் புதிய ரக ஆயுதம் ஒன்றை, அதிபர் கிம் ஜாங் உன் மேற் பார்வையில் வடகொரிய இராணுவம் வெற்றிகரமாகச் சோதனை செய்து பார்த் துள்ளதாக அந்நாட்டு அரசு ஊடகமான கே.சி.என்.ஏ. கூறியுள்ளது.

இராணுவத்தின் செயல்பாடுகள் மிகவும் திருப்திகரமாக உள்ளன என வடகொரிய அதிபர் பாராட்டினார் எனவும் அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. தங்கள் நாட்டு இராணுவம் இரகசியமாகவும், அற்புத மாகவும் ஆயுதச் சோதனை நடத்துவதாக கிம் ஜாங் உன் பாராட்டினார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாராலும் வெல்ல முடியாத திறன்களைப் பெற்று விளங்குவதாகவும் இராணுவத்தை அவர் புகழ்ந்தார் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அந்நாடு சோதனை செய்து பார்த் துள்ள புதிய ரக ஆயுதம் என்ன என்பது பற்றிய விவரங்கள் வெளியாகவில்லை.

# அமெ. விமானநிலையத்தில் பயணிகள் கணினிகளின் கோளாறால் காத்திருப்பு

அமெரிக்காவின் நியூயோர்க் விமான நிலையத்தில் தொழில்நுட்ப கோளாறு கார ணமாக ஆயிரக்கணக்கான பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

சுங்கம் மற்றும் எல்லை பாதுகாப்பு செயல்பாட்டுத்துறையின் கணினிகளில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பயணிகளைச் சோதிக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டது.



இதனால் ஜோன் எவ் கென்னடி சர்வ தேச விமானநிலையத்தில் குழுமியிருந்த பய ணிகள் மற்றும் ஊழியர்கள் விரக் தியடைந்தனர்.

இது குறித்து டுவிட்டரில் தகவல் பதிவிட்டுள்ள சுங்கம் மற்றும் எல் லைப்பாதுகாப்பு நிர்வாகம், கணினிக் கோளாறு சீர் செய்யப்பட்டுள்ளதாகவும் பயணிகள் சோதனைகள் முடிந்து அனுப்பப்படுகின்றனர் எனவும் தீங்கு ஏற்படுத்தக்கூடிய அளவு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரி வித்துள்ளது.

இதற்கு முன்பு இதே போல் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறால் 4 மணி நேரம் தாமதம் ஏற்பட்டது. அப்போது சுற்றுலா சென்று திரும்பிய ஏரா ள மான பயணிகள் பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரீன்லாந்தை விலைக்கு வாங்க அமெரிக்காவின் அதிபர் திட்டம்?

கிரீன்லாந்தை அமெரிக்கா விலைக்கு வாங்கப்போவதாக செய்தி வெளியான நிலையில், 'கிரீன்லாந்து விற்பனைக்கு இல்லை' என அந் நாட்டு வெளியுறவு துறை அமைச் சர் ஆனி லோன் பேகர் (Ane Lone Bagger) தெரிவித்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய தீவாக இருக்கும் 'கிரீன்லாந்து' வடக்கு அட்லாண்டிக் மற்றும் ஆர்க்டிக் பெருங்கடலுக்கு இடையே உள்ளது. சுமார் 8 லட்சத்து 11 ஆயிரம் சதுர மைல்கள் பரப்பளவு கொண்ட இந் தத்தீவு டென்மார்க்கின் கட்டுப்பாட்டில் தனியாட்சிப் பிரதேசமாக உள்ளது.

இங்கு அமெரிக்க இராணுவத் துக்குச் சொந்தமான 'துலே' (thule) விமானத் தளம் உள்ளது. மேலும் இயற்கை வளம் பொதிந்த நாடு என்பதால், அமெரிக்காவை போல், சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளும் இங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றன.

அதிபர் டிரம்ப் வருகிற செப்டெம்பர் மாதம் டென்மார்க் மற்றும் கிரீன் லாந்து பிரதமர்களைச் சந்திக்க இருக்கிறார். இந்த நிலையில், கிரீன் லாந்தை விலைக்கு வாங்குவது குறித்து டிரம்ப் ரகசிய ஆலோசனை நடத்தி வருகிறார் எனச் செய்திகள் வெளியாகின.

இதனைத் தற்போது திட்டவட்ட மாக மறுத்துள்ள கிரீன்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் ஆனி லோன் பேகர், வணிகத்துக்கு மட்டுமே கிரீன்லாந்து திறந்திருக்கும், விற்பனைக்கு அல்ல என தெரி வித்துள்ளார். இதேபோல், டென் மார்க்கின் முன்னாள் பிரதமர் லார்ஸ் லோக்கே ராஸ்முசென் (Lars Lokke Rasmussen), 'இது ஏப்ரல் ஃபூல் கொமடியாக இருக்கும்' என வேடிக் கையாகத் தெரிவித்தார்.

இதற்கு முன்னர், 1946 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபராக இருந்த ஹாரி ட்ரூமனும் கிரீன் லாந்தை வாங்க முயற்சித்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

# தென்கொரியாவுடன் இனிப் பேச்சு இல்லை வடகொரியா திட்டவட்டமாக அறிவித்துள்ளது

சியோல், ஒக.18

தென்கொரியாவுடன் இனிப் பேச்சு இல்லை என வடகொரியா அறிவித் துள்ளது.

கொரியா இரண்டாம் உலகப் போரின் முடிவில் வடகொரியா, தென்கொரியா என இருநாடுகளாக பிரிந்தது. அதனை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே பகைமை உருவானது. இதனால் கொரிய தீபகற் பம் பதற்றமான சூழலுக்குள் தள்ளப் பட்டது.

2011 ஆம் ஆண்டில் வடகொரியா வின் தலைவராக கிம் ஜாங் அன் பொறுப்பு ஏற்றமை முதல் இருநாடு களுக்கு இடையேயான மோதல் மேலும் தீவிரம் அடைந்தது.

தென்கொரியாவை அச்சுறுத்தும் விதமாகவும், தனது படை பலத்தை நிரூபிக்கும் வகையிலும் வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை மற்றும் அணுகுண்டுச் சோதனை களை நடத்தி வந்தது.

இது ஐ.நா. சபையின் தீர்மானங் களை மீறும் செயல் என்பதால் சர்வதேச அளவில் வடகொரியாவுக்கு எதிர்ப்பு கிளம்பியதோடு, அந்த நாடு தனிமைப் படுத்தப்பட்டது. ஆனாலும் வடகொரியா தனது போக்கை மாற்றிக்கொள்ள வில்லை.

ஆனால் கடந்த ஆண்டு இந்தச் சூழல் மாறியது. தென்கொரியாவில் நடந்த பாரா ஒலிம்பிக் போட்டியில் வடகொரிய வீரர்கள் கலந்துகொண் டமை மூலம் பரம எதிரிகளாக இருந்த இருநாடுகளுக்கும் இடையே பரஸ்பர நட்பு உருவானது.

வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன்னும், தென்கொரியா அதிபர் மூன் ஜே இன்னும் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சந்தித்துப் பேசினர். அதேபோல் தென்கொரியா மத்தியஸ்தம் செய்த தின் மூலம் வடகொரியா–அமெரிக்கா உறவிலும் இணக்கமான சூழல் உரு வானது.

இந்தச் சூழலில் கொரிய எல்லையில் அமெரிக்கா மற்றும் தென்கொரியா படைகள் கூட்டு போர்ப்பயிற்சியில் ஈடு படுகின்றமை எச்சரிக்கும் விதமாக வடகொரியா அண்மையில் அடுத் தடுத்து ஏவுகணைகளைச் சோதித்தது. ஆனால் அதை மீறியும் கூட்டுப்பயிற்சி தொடங்கப்பட்டது.

இந்த நிலையில், ஜப்பானிய ஆட்சியில் இருந்து கொரியா விடுதலை பெற்ற தினத்தில் நாட்டு மக்களிடம் உரையாற்றிய தென்கொரிய அதிபர் மூன் ஜே இன் 2045 ஆம் ஆண்டுக் குள் கொரிய தீபகற்பம் ஒன்றிணைக் கப்படும் என கூறினார்.

இதனால் கடும் கோபம் அடைந்த வடகொரியா, இனி தென்கொரியாவுடன் அமைதி பேச்சு கிடையாது என அறிவித்துள்ளது. தென்கொரிய அதி பரின் உரைக்கு எதிராக வடகொரியா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:–

இந்தத் தருணத்தில் கூட தென் கொரியா தனது கூட்டு இராணுவ பயிற் சியைத் தொடர்கிறது. அதே சமயம் அமைதியான பொருளாதாரம் அல்லது அமைதியான ஆட்சியைப் பற்றி பேசு கிறது. இது முரணானது.

90 நாள்களில் நமது பெரும்பாலான படைகளை அழிக்கத் திட்டமிடும் யுத்த காட்சிகளை அரங்கேற்றும் அதே வேளையில், வடக்கு மற்றும் தெற்கிற்கு இடையிலான பேச்சு அவர் குறிப்பிடும் போது அவரது சிந்தனை செயல்முறை சரியாக இருக்கிறதா என்று நாங்கள் கேள்வி எழுப்புகிறோம்.

அவர் (மூன் ஜே இன்) உண்மை யிலேயே ஒரு வெட்கமில்லாத மனிதர். கொரிய தீபகற்பத்தை மீண்டும் ஒன் றிணைப்பது குறித்த அவரது கருத்து கள் மிகவும் மோசமானவை. அவை ஒரு பசுவின் வேகவைத்த தலையை சிரிக்க வைக்கும் முயற்சியை போன் றது.

அணு ஆயுதங்களைக் கைவிடு வது குறித்த பேச்சில் ஏற்பட்ட முட் டுக்கட்டைக்கு தென்கொரியா கூட்டுப் பயிற்சியை நடத்த முடிவெடுத்ததுதான் காரணம். எனவே தென்கொரியாவுடன் பேச எங்களுக்கு இனி வார்த்தைகள் இல்லை. – இவ்வாறு அந்த அறிக்கை யில் கூறப்பட்டு உள்ளது.

இதற்கிடையில், நேற்று முன்தினம் அதிகாலை வடகொரியா தனது கிழக்கு கடற்கரையில் இரு ஏவுகணைகளை ஏவி சோதனை செய்ததாக தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இது ஒரு மாதத்திற்குள் நடத்தப்பட்ட ஆறாவது ஏவுகணை சோதனை ஆகும்.

# பலாலி விமான ஓடுபாதைக்கு மேலதிக காணி தரமுடியாது!

## ரணிலிடம் மாவை எம்.பி. திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஓக. 18

பலாலி விமான நிலையத்தின் ஓடுதள விஸ்தரிப்புக்கு மேலதிக காணிகளைச் சுவீகரிக்க அனுமதிக்கமுடியாது. மாறாக தேவைப்படின் கடற்கரைப் பக்கமாக கடலை நிரவி ஓடுதளத்தை அமையுங்கள். அதற்கான வழிவகையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆராயவேண்டும்.



இவ்வாறு நேற்று முன் தினம் பிரதமர் ரணில் முன்னிலையில் திட்டவட்டமாகக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

யாழ். மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மாவை இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பலாலி விமான நிலைய அபிவிருத்தி தற்போது நடைபெற்று வருகின்றது. விமான நிலையத்துக்கான ஓடுதளம் விஸ்தரிக்கப்படுமாயின் மக்களின் காணிகள் சிலவற்றைச் சுவீகரிக்க ஆலோசித்து வருவதாக அறிகின்றேன். அதனை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஓடுதளத்தை விஸ்தரிக்கவேண்டுமாயின் விமான நிலையத்தின் வடக்குப் பக்கமாக உள்ள கடல் பகுதியை நிரவி அதனை அமைக்க முடியும் – என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாதுகாப்புத் தரப்பினர்,விமான நிலைய அபிவிருத்தியின்போது காணிகள் சுவீகரிப்பது தொடர்பில் இப்போது எந்த முயற்சியும் நடைபெறவில்லை. நீங்கள் சொல்வது போல் கடலை நிரவி ஓடுதளம் அமைப்பது தொடர்பாக நாமும் சிவில் விமான போக்குவரத்துத் துறையினர் போன்ற பல தரப்புக்களுடனும் பேசி ஓர் முடிவுக்கு வரமுடியும் – என்றனர். (ஐ - 07)

## தலைமன்னாரில் சிக்கியது 'ஐஸ்'!



மன்னார், ஓக. 18

தலைமன்னார் – ஊருமலை பகுதியில் 1.05 கிலோ ஐஸ் போதைப்பொருள் கடற்படையினரால் நேற்று முன்தினம் அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது, இப்போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஊருமலை கடற்கரைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்தப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், கைப்பற்றப்பட்டுள்ள போதைப்பொருள் மேலதிக விசாரணைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ)

## மின்னல் தாக்கி இளைஞன் பலி

கொழும்பு, ஓக. 18

கெக்கிராவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உட்பட்ட மாமினியாவ வாவிக்கு அருகில் மின்னல் தாக்கி இளைஞரொருவர் பலியாகியுள்ளார்.

மரதன்கடவல பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கெக்கிராவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தேரரைக் கடத்த முற்பட்டவர் கைது

*கொழும்பு, ஓக. 18*

*அத்துருகிரிய விகாரையிலுள்ள தேரரைக் கடத்த முயற்சித்தவர்களுள் ஒருவர், நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.*

*ஓகஸ்ட் 10ஆம் திகதி விகாரைக்குஅருகிலுள்ள கடைக்கு வந்து அந்த விகாரையிலுள்ள தேரரின் புகைப்படத்தைக் காட்டி, வாகனத்தில் வந்த குழுவொன்று விசாரித்துள்ளது. இந்தத் தகவல் அந்தத் தேரருக்கு அறியக் கிடைத்ததும், அவர் அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.*

*இதனையடுத்து, பொலிஸார்மேற்கொண்ட விசாரணைகளின்போதே, வெலிக்கடை, கௌதமி வீதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஐ)*

# குருநகர் மீன்பிடித் துறைமுகம் விரைவில் புனரமைக்கப்படும்

## யாழ். வந்த பிரதமர் உறுதியளிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

மத்திய அரசின் 2015ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் குருநகர் மீன்பிடிப் துறைமுகத்தின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கப்பட்டபோதும் அது பின்னர் காணாமல்போயுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் சுட்டிக்காட்டியதை அடுத்து, குருநகர் மீன்பிடித் துறைமுகம் புனரமைத்துக் கொடுக்கப்படும் எனப் பிரதமர் ரணில் உறுதியளித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது. இதன்போதே யாழ். மாநகர முதல்வர் குருநகர் மீன்பிடித் துறைமுகம் புனரமைக்கப்படாமையைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் கூறுகையில் –

மத்திய அரசின் 2015ஆம் ஆண்டு பட்ஜெட்டில் அப்போதைய நிதி அமைச்சரினால், குருநகர் மீன்பிடித் துறைமுகத்துக்கான நிதி ஒதுக்கப்பட்டது. ஆனாலும் பின்னர் அந்த நிதி காணாமல்போயுள்ளது – என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதமர் குருநகர் மீன்பிடி துறைமுகத்தை விசேட செயற்றிட்டமாக எடுத்துக் கொண்டு புனரமைத்து தருவதாக உறுதியளித்தார்.

மாநகர முதல்வர் கூறுகையில்,

கொழும்புத்துறை தொடக்கம் நாவாந்துறை வரையான கரையோரப் பகுதிகளில் மக்கள் குடியேறி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளும் இல்லை. 1977ஆம் ஆண்டு கடலை நிரவி இந்த மக்களுக்குரிய குடியிருப்புக்களை அமைக்க சகல திட்டங்களும் இடப்பட்டன. ஆனால் அது சாத்தியப்படவில்லை.



இந்நிலையில் அதனையும் கவனத்தில் எடுத்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 500 குடும்பங்களுக்கு 1977ஆம் ஆண்டு செய்யப்பட்ட திட்டத்தின் படி ஒரு மாடி அல்லது இரு மாடிக் குடியிருப்புக்களை அமைத்துக் கொடுக்க வேண்டும் எனக் கூறினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இந்த விடயம் தொடர்பாக பேசி, உத்தேச மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை வழங்குமாறு கோரினார். (ஐ - 07)

## இரு பௌத்த பீடங்கள் இணைந்தன!

கொழும்பு, ஓக. 18

ராமன்ய பௌத்த பீடம் மற்றும் அமரபுர பௌத்த பீடம் ஆகிய இரண்டையும் ஒன்றிணைப்பதற்கான ஒப்பந்தம் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இரு பீடங்களும் ஒன்றிணைக்கப்பட்டு, ஸ்ரீலங்கா அமரபுரராமன்யசாமகீ மஹா சங்க சபாவ என்ற பெயரில் இனி இயங்கவுள்ளன. (ஐ)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று



யாழ்ப்பாணம், ஓக.18

இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் –

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை **குழு இசை** (யாழ். சென் ஜோன்ஸ் பல்லக்ஷரி மாணவர்கள்) –

வயலின் – த. கிரிதரன், மிருதங்கம் – க. இசைநிலவன், நெறியாள்கை – குமுதா உமாகாந்தன் –

7.15 – 8.15 வரை **பக்தி இசை** –

பாட்டு – எஸ். மகேந்திரம், ம.தயாபரன், ஹார்மோனியம் – ந.செல்வச்சந்திரன், கீபோட் – க.ஸ்ரீகுகன், மிருதங்கம் – சதா. வேல்மாறன், தபேலா – ம.பிரபா, ப்பாட் – அ.கேதீஸ் (இ)

# கோட்டாவின் கடவுச்சீட்டு; ஆரம்பித்தது விசாரணை!

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளருமான கோட்டாபய ராஜபக்ஷ, குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்திலிருந்து கடவுச்சீட்டை எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து இரு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்துமாறு, பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவினால், கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டுப் பிரஜையாகவிருந்த கோட்டாபய ராஜபக்ஷ, புதிய தேசிய அடையாள அட்டையொன்றைப் பெற்றுக்கொண்டு, அதனூடாகக் கடவுச் சீட்டைப் பெற்றுக்கொண்டுள்ளாரா என்பது தொடர்பிலேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# மன அழுத்தத்தை

## கையாள்வதற்கான சிறப்பு செயற் திட்டம்

எமது சமுதாயத்தில் இன்றைய காலகட்டத்தில் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றோர் அதிகளவில் காணப்படுகின்றனர். இவ்வாறான ஒரு நிலைக்கு அதிகரித்த வேலைப்பளு, ஆடம்பர வாழ்க்கை முறை, நாகரிக மாற்றம், நேர முகாமைத்துவம் இன்மை, அதிகரித்த தேவைகள் உட்பட பல்வேறு காரணிகளை கூறிக் கொண்டே போக முடியும்.

இன்றைய காலப்பகுதியில் அதிகரித்த மன அழுத்தம், அந்த மன அழுத்தத்தைச் சரியாக கையாளுகின்ற திறமை குறைவு இவற்றினால் பல்வேறு நோய்கள் மற்றும் சமூக உளப்பிரச்சினைகள் ஏற்பட வழிவகுக்கின்றது. இவ்வாறான தன்மையினால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பாதிப்பினை எதிர்கொள்கின்றனர்.

குழந்தைகள் மத்தியில் இவ் மனஅழுத்தம் காணப்படும் போது அவர்களின் உடல், உள வளர்ச்சியில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இதேபோன்று பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் மன அழுத்த நிலையால் அவர்களின் கல்வி நிலையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான நிலை ஆனது அவர்களின் எதிர்கால வாழ்க்கையைப் பாதிப்பதாக அமையும்.

இளைஞர்,யுவதிகள் மத்தியில் காணப்படும் மன அழுத்த நிலை ஆனது அவர்களின் நடத்தை மாற்றம் அல்லது அவர்களின் நடத்தை பிறழ்வுக்கு வழிவகுக்கும்.

அதாவது ஓர் இளைஞர் அல்லது யுவதி மன அழுத்தத்திற்கு உள்ளாகும்போது போதைப்பொருள் மற்றும் மது பாவனைக்கு அடிமையாகி சமூகத்தில் பல வன்முறைகள் ஏற்பட வழிவகுக்கின்றது. இவ்வாறான ஒருநிலை ஆனது எதிர்காலத்தில் ஆரோக்கியமற்ற சமுதாயம் உருவாக வழிவகுக்கும்.

அதேசமயத்தில் வயது வந்தோர்கள் மத்தியில் இவ் மன அழுத்த நிலை ஆனது பல பாதிப்புக்களை ஏற்படுத்தும். அதாவது வயது வந்தோர் மத்தியில் தொற்றாநோய்கள் ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்யும். சல ரோகம், புற்றுநோய், உயர் குருதி அமுக்கம் போன்ற தொற்றா நோய்கள் உருவாகுவதில் முக்கிய பங்கினை இவ் மன அழுத்தம் கொண்டுள்ளது.

அதிகரித்த மன அழுத்தத்தினை கட்டுப்படுத்தல் மற்றும் மன அழுத்தத்தை திறமையாக கையாளுவதற்கு பல செயற் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான செயற்றிட்டங்களில் ஒன்றாக







நம் சுகம் கையில்

சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையும் பல பங்குதாரர்களும் இணைந்து நடத்தும் ‘எம் சுகம் எம் கையில்’ என்ற செயற் திட்டம் காணப்படுகின்றது.

இச்செயற்திட்டத்தின் முக்கிய பங்குதாரர்களாக நல்லூர் பிரதேச வாழ் மக்களும், குடும்ப சுக நல நிலைய நோயாளர்களும், பிரதேச வாழ் இளைஞர் மற்றும் யுவதிகளும் காணப்படுகின்றனர்.

சிறார்களுக்கான செயற் திட்டத்தில் குடும்ப மருத்துவத் துறையுடன் ஆறுதல் நிறுவனமும் கைகோர்த்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான செயற்திட்டத்தில் வடமாகாண கல்வி அமைச்சு முக்கிய பங்குதாரர்களாகவும் செயற்திட்ட முன்னோடியாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான செயற்திட்டத்தில் யாழ். பல்கலைக்கழக well - being center உம் ஆஸ்திரேலியாவில் உள்ள யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பழைய மாணவர்களும் முக்கிய பங்குதாரர்களாக தொழிற்பட்டு



யாழ் மருத்துவபீட குடும்ப சுகநல நிலைய முகப்புத் தோற்றம்

வருகின்றனர். பொது மக்கள் மற்றும் நோயாளர்கள் செயற்றிட்டத்தில் வடமாகாண சுகாதார அமைச்சும் குடும்ப சுகநல நிலைய நோயாளர் நலன்புரிச் சங்கமும் முக்கிய பங்குதாரர்களாக இருக்கின்றமை சிறப்பானதாகும்.

மன அழுத்தத்தினை கையாளும் இவ் செயற்திட்டத்தின் முக்கிய மையமாக கோண்டாவில் பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் அமைந்திருக்கும் குடும்ப சுகநல நிலையம் தொழிற்படுகின்றது. இந் நிலையம் ஆனது மன அழுத்தத்தினை கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அவையாவன-

1.யோகா மற்றும் தியானப் பயிற்சி
2.மூச்சுப் பயிற்சி
3.சிரிப்பு சிகிச்சை முறை
4.உளவள ஆற்றுப்படுத்தல்
5.இயற்கையுடன் ஒன்றிணைந்து நடத்தை சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மன அழுத்தத்னை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு குடும்ப சுகநல நிலையத்தின் வளாகத்தில் அழகிய பூந்தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு அது இப் பிரதேச வாழ் மக்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான இயற்கைப் பூந்தோட்டத்தில் மேற்கொள்ளப்படும் மன அழுத்தத்தை குறைக்கும் செயன்முறைகள் ஆனது பல்வேறுபட்ட மக்களுக்கு பயனளிக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது.

மன அழுத்தத்தினை சிறப்பாக கையாளும் செயற் திட்டத்தில் நீங்களும் இணைய விரும்பினால் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 021 2053760 (குடும்ப சுகநல நிலையம் கோண்டாவில்)

*






சத்யா கோபாலன்

## உலகை உலுக்கும் புகைப்படம்

# இப்படி எதற்கு ஆசீர்வாதம்?

மிகப் பெரிய உருவம், கம்பீரமான தோற்றம் கொண்ட ஒரு யானை அதற்கு நேர்மறையாக இருக்கும் புகைப்படம் வெளியாகி மொத்த உலகத்தையும் அதிர்ச்சியாக்கியுள்ளது.

மனிதர்கள் சூழ் உலகில் கொஞ்சம் கொஞ்சமாக விலங்குகளுக்கு இடம் இல்லாத நிலை ஏற்பட்டுவிட்டது. பல்வேறு அரிய உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. சில உயி ரினங்கள் மொத்தமாக அழிந்தேவிட்டன. உலகம் முழுவதும் உள்ள விலங்குகளின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிடலாம் என்றே கூறவேண்டும்.

காடுகள் ஆக்கிரமிப்பு, மனிதத் துன்புறுத்தல், உணவுப் பற்றாக்குறை, வேட்டை போன்ற காரணங்களால் பல உயிரினங்கள் தங்கள் இருப்பிடத்தை விடுத்து முற்றிலும் மாறுபட்ட சூழலில் வாழ்ந்து வருகின்றன. இப்படியான சூழலில் சேவ் எலிபேண்ட் (Save Elephant) என்ற அறக்கட்டளை தங்கள் ஃபேஸ்புக் பக்கத்தில் ஒரு புகைப்படத்தை வெளியிட்டுள்ளது. மனதை உலுக்கும் இந்தப் படத்தின் கதை கொடூரத்தின் உச்சம்.

'இலங்கையில் உள்ள கண்டியில் ஆண்டுதோறும் எசலா பெரஹறா என்ற திருவிழா கொண்டாடப்படும். பத்து நாள்கள் நடைபெறும் இந்தத் திருவிழா இந்த வருடம் ஒகஸ்ட் 5 ஆம் திகதி தொடங்கி நிறைவடைந்துள்ளது. இந்தத் திருவிழாவில் 50இற்கும் மேற்பட்ட யானைகளும், 200 இற்கும் அதிகமான கலைஞர்களும் பங்கேற்றனர். திருவிழாவில் கலந்துகொள்ளும் யானைகளில் 70 வயதான டிக்கிரி என்ற பெண் யானையும் ஒன்று.

டிக்கிரி பற்றிக் குறிப்பிட்டுள்ள சேவ் எலிபேண்ட் (Save Elephant) அறக்கட்டளை, டிக்கிரிக்கு உடல் நிலை சரியில்லை. திரு விழாவில் பங்கேற்கும் யானைகளில் இதுவும் ஒன்று. திருவிழா தொடங்கும்போது அதாவது மாலை நேரத்தில் பேரணியில் இணையும் டிக்கிரி நள்ளிரவில்தான் மீண்டும் தன் இடத்துக்குத் திரும்புகிறது. எலும்பும், தோலுமாக உள்ள டிக்கிரியின் நிலை மிகவும் மோசமாக உள்ளது, ஆனால் அதையெல்லாம் பொருட் படுத்தாமல் மக்களின் கூச்சல், புகை, பட்டாசு போன்றவற்றுக்கு நடுவே அதை அழைத்துச் செல்கின்றனர்.

டிக்கிரி தினமும் பல கிலோமீற்றர்களுக்கு நடந்து அழைத்துச் செல்லப்படுகிறது. அப்படிச் செல்லும் வழிகளில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதம் செய்யவும் கட்டளையிடுகின்றனர். அவளின் உடல் முழுவதும் பட்டாடைகளால் மூடி அலங்காரம் செய்யப் பட்டுள்ளது. அதனால் யானையின் எலும்பு உடம்பு மக்களுக்குத் தெரிவதில்லை. அதிக வெளிச்சத்தினால் அவளின் கண்களில் வரும் கண்ணீரையும் யாரும் கவனிப்பதில்லை.

விழா என்பது அனைவருக்கும் நம்பிக்கை அளிக்கக் கூடிய ஒன்று. ஆனால் அது பிறருக்கு எந்தக் கஷ்டத்தையும் அளிக்காமல் இருக்க வேண்டும். டிக்கிரியை கஷ்டப்படுத்திப் பெறப்படும் ஆசீர்வாதம் எப்படிச் சிறந்ததாக இருக்கும். டிக்கிரியின் புகைப்படம் ஏற்றுக்கொள்ள தக்கதாக இருந்தால் நம்மால் அவற்றுக்கு எப்போதும் அமைதியான வாழ்வைத் தர முடியாது. அன்பு செய்வது, எந்தத் தீங்கும் செய்யாதது மற்றும் இரக்கத்தின் பாதையைப் பின்பற்றுவது போன்றவை புத்தரின் வழி. அதைப் பின்பற்ற வேண்டிய நேரம் இது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ★



# உலகில் மிருகங்களை வழிபடும் மதச் சடங்கு



## திருமணமாகாத ஆண்களை குதிரைகளுடன் கட்டிப்போடும் விநோத கலாசாரம்

உலகம் முழுவதும் மிருக வழிபாடு என்பது பரவலாக இருக்கும் ஒரு மதச்சடங்கு ஆகும்.

அனைத்து மதங்களிலும் அவரவர் கலாசாரத்தை சார்ந்து சில மிருகங்களை புனிதமானதாக கருதி வழிபடுகின்றனர்.

இது இப்போது மட்டுமல்ல பண்டைய காலம் முதலே இருந்து வரும் ஒரு வழிபாட்டு முறையாகும்.

இந்த உலகமே ஒரு விந்தையான விடயமாக இருக்கும் போது, அதில் சுவாரஷ்யங்களுக்கு பஞ்சமிருக்காது. அதில், ஒன்றுதான் இது, நாம் இங்கு வேண்டாமென ஒதுக்கும் சில மிருகங்கள் சில நாடுகளில் தெய்வமாக உள்ளன.

இந்த பதிவில் உலகம் முழுவதும் அதிகம் வழிபடபட்டு வந்த மிருகங்களின் தரவரிசையை பார்க்கலாம்.

**பன்றி**

சீனாவின் பன்னிரண்டு புனித மிருகங்களில் பன்றியும் ஒன்றாகும். பழங்கால எகிப்தில் பன்றிகள் கடவுளுக்கும் மிகவும் நெருக்கமான புனிதமான ஒன்றாக கருதப்பட்டது.

**பாம்பு**

இந்தியா, இலங்கை போன்ற பல பகுதிகளிலும் இன்றும் பாம்பை கடவுளாக வழிபடும் பழக்கம் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

அதற்கு காரணம் சிவபெருமான் தனது கழுத்தில் பாம்பை அணிந்திருப்பதுதான்.

**புலி**

சீனர்களின் பன்னிரண்டு புனித மிருகங்களில் புலியும் ஒன்றாகும். மேலும் அவர்களின் தற்காப்பு கலைகளில் புலி பூமியின் சின்னமாக இருக்கிறது. நேபாளத்தில் புலிகளுக்கென பாக் ஜாத்ரா என்னும் திருவிழாவே உள்ளது.

வியட்நாமின் பல கிராமங்களிலும் புலி கோவில்கள் இருக்கின்றன. கௌரவம் மற்றும் வீரத்தின் அடையாளமாக இருக்கும் புலி அனைத்து கோவில்களின் வாசல்களிலும் தவறாது இருக்கும்.

**குரங்கு**

சீனர்களின் புனித மிருகங்களில் குரங்கு ஒன்பதாவது இடத்தில் உள்ளது. இந்து மதத்தில் குரங்கு ஆஞ்சநேயரின் உருவமாக வணங்கப்படுகிறது.

வட ஆபிரிக்காவில் கூட குரங்குகள் கடவுளாக வழிபடப்பட்டு வந்துள்ளன. புத்த மதத்தில் குரங்கு புத்தரின் மறுபிறவியென நினைக்கிறார்கள். சீன புத்த மதத்தினர் குரங்கை நிலையில்லாத மனித மனதுடன் ஒப்பிடுகின்றனர்.

**நாய்**

நேபாளம் மற்றும் இந்தியாவில் நாய்க்கென தனி ஆன்மீக அடையாளம் இருக்கிறது. நேபாளத்தில் நாய்களுக்கென டொய்ஹர் என்னும் ஐந்து நாள் திருவிழா கொண்டாடப்படுகிறது. இந்து மதத்தில் நாய் கடவுளின் தூதனாக கருதப்படுகிறது. வடக்கு ஆசியாவைச் சேர்ந்தவர்களும் நாயை கடவுளாக வணங்குகின்றனர்.

**குதிரை**

துருக்கி மற்றும் ஐரோப்பிய மக்கள் குதிரையை வழிபட்டு கொண்டிருந்தனர். பொசைடன் என்னும் தண்ணீர் கடவுள் குதிரை வடிவத்தில்தான் தோன்றியதாக அந்த மக்கள் நம்புகின்றனர்.

இந்து மற்றும் புத்த மதத்தில் குதிரை ஹயக்ரீவர் என்னும் பெயரில் வழிபடப்படுகிறது.

பால்கன் கலாசாரத்தில் திருமணமாகாத ஆண்களை குதிரைகளுடன் கட்டிப்போடும் பழக்கம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இதனால், திருமணம் நடக்கும் என்பது அவர்களின் நம்பிக்கையாகவும் இருந்துள்ளது.



# கற்களால் தாக்கி கொள்ளும் வித்தியாசமான திருவிழா

ஒருவரை ஒருவர் கற்களால் தாக்கிக் கொள்ளும் வித்தியாசமான திருவிழா உத்தரகாண்ட் மாநிலத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தியாவில் பலவிதமான கலாசாரங்கள் உள்ளன. அவற்றுக்கு ஏற்ப மக்களின் பண்டிகை முறைகளும் மாறுபடுகின்றன. பிரமாண்டமான திருவிழாக்கள் முதல் மிரள வைக்கும் திருவிழாக்கள் வரை நம் மக்களின் தனித்துவமான பண்டிகைகள் ஏராளம். இந்த வரிசையில் உத்தரகாண்டிலும் ஒரு விநோத திருவிழா கொண்டாடப்பட்டுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலம் சம்பவாட் மாவட்டத்தில் 'பாக்வால்' என்ற திருவிழா அண்மையில் கொண்டாடப்பட்டது. இரு பிரிவினராகப் பிரியும் மக்கள் ஒருவரை ஒருவர் கற்களை வீசி தாக்கிக்கொள்கின்றனர். இதுதான் இந்தத் திருவிழாவின் சிறப்பம்சம். ஆண்டுதோறும் ரக்ஷாபந்தன் நாளில், ஷ்ரவன் பூர்ணிமா என்ற பெயரில் இந்தத் திருவிழா கொண்டாடப்படுகிறது.

'கல் வீச்சு விளையாட்டின்போது மண்ணில் சிந்தப்படும் ரத்தத்துக்குப் பிறகே கடவுள் மகிழ்ச்சி அடைகிறார்' என்பது உள்ளூர் மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடந்த கல் எறியும் நிகழ்வு 10 நிமிடங்கள் நீடித்தது எனவும் இதில் 100 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர் எனவும் கோயிலின் தலைமை நிர்வாகி ஜோஷ் தெரிவித்துள்ளார். இதுகுறித்துப் பேசியவர்,

பழங்காலத்தில், கடவுளைக் குளிர்விக்க ஆண்டுக்கு ஒருமுறை ஒருவரைப் பலியிட வேண்டும் என்பது நடைமுறையில் இருந்தது. அப்போது வயதான பெண்மணி ஒருவர், தன்னுடைய ஒரே பேரனைப் பலி கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் கடவுளிடம் முறையிட்டுள்ளார்.

இதையடுத்து அந்தக் கோயிலிலிருந்த பக்தர்களின் கனவில் வந்த கடவுள், முதியவரின் வேண்டுதலைத் தான் ஏற்பதாகவும் மனித பலிக்குப் பதிலாக ஒருவரை ஒருவர் கற்களால் பலமாகத் தாக்கிக்கொண்டு மனித ரத்தம் மண்ணில் சிந்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இதை ஏற்ற பக்தர்களும், அன்று முதல் ஆண்டுதோறும் கற்களால் தாக்கிக்கொள்ளும் ஷ்ரவன் பூர்ணிமாவைக் கொண்டாடி வருகின்றனர் எனக் கூறியுள்ளார்.

சம்யல், கஹர்வால், ஒல்கியா, லாம்கரியா ஆகிய நான்கு கடவுள்கள் தங்கள் நிலங்களைக் காக்கின்றனர் என உள்ளூர் மக்கள் நம்புகின்றனர். இந்த நான்கு கடவுள்களை வணங்குபவர்களும் இரு குழுவாகப் பிரிந்து கற்களால் தாக்கிக்கொள்கின்றனர்.

மூத்த மதகுருவிடமிருந்து சமிக்ஞை வந்தவுடன் தாக்குதலை நிறுத்திவிடுகின்றனர். 'திருவிழாவின்போது கற்கள் பயன்படுத்தக் கூடாது' என அம்மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், ஊர் மக்கள் கற்களைப் பதுக்கி வைத்து திருவிழாவின்போது தாக்கிக் கொள்கிறார்கள்.



**இன்றும் கூட இப்படியொரு மூட நம்பிக்கை**

# கோபத்தை குறைப்பவனே பக்தன்...!

ஒரு சமயம் ஸ்ரீகிருஷ்ணர், அவரது சகோதரர் பலராமர், அர்ஜுனன் இம்மூவரும் ஓர் அடர்ந்த வனத்தின் வழியாகச் சென்றனர். இரவாகி விட்டது. மூவரும் ஓரிடத்தில் தங்கிவிட்டு விடிந்ததும் செல்லலாம் என்று எண்ணினர்.

வனத்தில் துஷ்ட மிருகங்கள் இருக்கும் என்பதால் மூவரும் ஒரு சேரத் தூங்கக்கூடாது என்றும், ஜாமத்திற்கு ஒருவராகத் காவல் இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர்.

அதன்படி ஸ்ரீகிருஷ்ணரும், பலராமரும் தூங்கச்செல்ல, அர்ஜுனன் காவல் இருந்தான். அப்போது திடீரென புகை மண்டலம் சூழ்ந்தது.


அதிலிருந்து ஒரு பயங்கர உருவம் வெளிப்பட்டது. அகன்ற நாசியும், தூக்கிய பற்களும், முட்டைக் கண்களுமாக இருந்தது அவ்வுருவம்.

மரத்தடியில் இருவர் தூங்குகின்றமையையும், ஒருவன் காவல் இருக்கின்றமையையும் கண்ட அவ்வுருவம் தூங்கும் இருவரின் அருகில் சென்றது. அதைக்கண்ட அர்ஜுனன் கோபத்துடன் அதைத் தடுத்தான்.

அப்போது அவ்வுருவம் அவ்விருவரையும் தான் கொல்லப் போவதாகவும் அதற்கு அர்ஜுனன் துணை செய்ய வேண்டும் என்றும் கேட்டது.

அதைக்கேட்டு கோபம் மிகக்கொண்டு அவ்வுருவத்தைத் தாக்கினான். அர்ஜுனனின் கோபம் அதிகமாக அதிகமாக அவ்வுருவத்தில் பலமும் அதன் வடிவமும் பெருகியது.

அர்ஜுனன் ஆக்ரோஷத்தோடு அதனுடன் போரிட அது பூதாகாரமாய் விளங்கியது. அர்ஜுனனை பலமாகத் தாக்கிவிட்டு மறைந்தது.



இரண்டாம் ஜாமம் தொடங்கவும் பலராமரை எழுப்பிவிட்டு அர்ஜுனன் தூங்கச் சென்றான். பலராமர் காவல் இருந்தார்.

அப்போது மீண்டும் அவ்வுருவம் அங்கு தோன்றி அர்ஜுனனிடம் கூறியதுபோல பலராமரிடமும் கூறியது. அதைக்கேட்டு கோபம் கொண்ட பலராமர் அதனுடன் சண்டையிட்டார்.

அவ்வுருவம் அடிபணிவதாய் இல்லை.

பலராமரின் கோபம் அதிகமாக அதிகமாக அவ்வுருவத்தின் பலமும் அதன் வடிவமும் பெரிதானது. பின் பலராமரையும் பலமாகத் தாக்கிவிட்டு அவ்வுருவம் மறைந்துவிட்டது.

மூன்றாம் ஜாமம் தொடங்கவும் பலராமர் கிருஷ்ணரை காவலுக்கு எழுப்பிவிட்டு படுக்கச் சென்றார். அப்போதும் அப்பொல்லாத உருவம் தோன்றியது. அதைப் பார்த்த கிருஷ்ணர் கடகடவெனச் சிரித்தார். ஏன் சிரிக்கிறாய்? என்றது அவ்வுருவம்.

உனது தூக்கிய பற்களும், அழகான முட்டைக் கண்களையும் கண்டுதான், என்றார் சிரிப்பை அடக்க முடியாமல். அவர் தன்னைக் கேலி செய்வதைக் கண்டு ஆக்ரோஷத்துடன் அது சண்டை போட்டது.

கிருஷ்ணரோ புன்னகையை மாற்றாமலே, சண்டை போட்டார். கிருஷ்ணர் சிரிக்கச் சிரிக்க அவ்வுருவத்தின் பலமும் அதன் வடிவமும் குறைந்து கொண்டே வந்தது.

கடைசியில் அவ்வுருவம் சின்னஞ்சிறு புழுவாக மாறி தரையில் நெளிந்தது.

ஸ்ரீகிருஷ்ணர் அப்புழுவை எடுத்து ஒரு துணியில் முடிந்து வைத்தார். பொழுது விடிந்தது. பலராமரும், அர்ஜுனனும் எழுந்தனர்.

இருவரும் இரவில் ஒரு பயங்கர உருவம் வந்ததும், அவர்களைத் தாக்கியதும் அவ்வுருவம் வளர்ந்து வளர்ந்து பெரிதாகியது பற்றியும் பேசினர். அப்போது கிருஷ்ணர் துணியில் முடிந்திருந்த புழுவைக் காட்டி, நீங்கள் இருவரும் சண்டை போட்ட உருவம் இதுதான்.

நீங்கள் அதனுடன் சண்டை போடும் போது கடுமையாகக் கோபப்பட்டீர்கள். உங்கள் கோபம் அதிகரிக்க அதிகரிக்க அதன் பலமும் வடிவமும் அதிகரித்தது.

நான் சிரித்துக்கொண்டே சண்டை போட்டதால் இதன் பலமும் வடிவமும் குறைந்து கொண்டே வந்து புழுவாக மாறிவிட்டது.

வம்பு சண்டைக்கு வருபவனை விட்டு புன்னகையோடு வெளியேறி விட்டால், அவன் புழுவுக்கு சமமாகி விடுவான். கோபத்தைக் குறைப்பவனே பக்தன் என்றார்..!! அந்த பூதத்தை மன அழுத்தமாக எண்ணிக் கொள்ளுங்கள்.. இந்த காலத்திற்கு அந்த கதை மிக அழகாக பொருந்தும்..

## இறைவன் மீது கண்களைப் பதிப்போம்

நம்மைச் சுற்றி நிகழும் சிறு சிறு விடயங்களில் மூழ்கி தொலைந்து போகாமல் இறைவன் மீது நம் கண்களைப் பதித்து அவரில் பேருவகை கொள்வதற்கு மரியா நமக்குச் சொல்லித்தருகிறார் என திருத்தந்தை 15 ஒகஸ்ட் 2019 அன்று புனித கன்னி மரியாவின் விண்ணேற்புப் பெருவிழா அன்று வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் தெரிவித்தார்.


# காலைக்கதிர்
Kalaikathir

கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.


## விண்ணேற்புப் பெருவிழாவில் திருத்தந்தையின் உரை

வாழ்வில் நம்மை வந்தடையும் நல்ல செய்திகளுக்காக முடிவுகளுக்காக உவகை கொள்ளும் நாம் இறைவனில் பேருவகை கொள்ளுமாறு அன்னை மரியா நமக்குச் சொல்லித்தருகிறார். மரியன்னையைப் போல் இறைவனில் நாம் மகிழ்வைக் கண்டடைந்தால் வாழ்வில் நிகழும் பல அற்பத்தனமான சங்கடங்கள் நம்மைவிட்டு விலகும் என்றும் இறைவன் ஆற்றும் அரும்பெரும் செயல்களை நம்மால் புரிந்துகொள்ள முடியும் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### உயிர்ப்புப் பெருவிழா நாளில் கொடுமை:

# உண்மை வெளிவரவேண்டும்

### மீண்டும் இலங்கை கத்தோலிக்கர்கள் விண்ணப்பம்

21 ஏப்ரல் 2019 உயிர்ப்புப் பெருவிழாவன்று இலங்கையின் ஆலயங்களிலும் விடுதிகளிலும் நடைபெற்ற தற்கொலைப்படைத் தாக்குதல்களைக் குறித்த உண்மையான விவரங்கள் விரைவில் மக்களை அடையவேண்டும் என்று இலங்கை வாழ் கத்தோலிக்கர்கள் மீண்டும் ஒரு முறை விண்ணப்பித்துள்ளனர்.

மதச் சுதந்திரம் குறித்த ஆய்வுகளை மேற் கொள்ளும் ஐ.நா. அவையின் சிறப்புப் பிரிவின் தலைவர் அகமது ஷாஹீத் அவர்கள் ஒகஸ்ட் 1 முதல் திகதி முதல் 26 ஆம் திகதி முடிய 12 நாள் பயணத்தை மேற்கொண்டுள்ளமையை அடுத்து இந்த விண்ணப்பங்கள் எழுப்பப்பட் டுள்ளன.

உயிர்ப்பு ஞாயிறு கொடூரத்தைத் தொடர்ந்து இலங்கை அரசு பல்வேறு விசாரணைக் குழுக்களை நிறுவியிருந்தாலும் அவற்றின் செயல்பாடுகளும் கண்டுபிடிப்புகளும் இன்னும் வெளிவரவில்லை என்று இலங்கை ஆயர் பேரவை, ஓர் அறிக்கையை, வருத்தத்துடன் வெளியிட் டுள்ளது.

இதற்கிடையே இலங்கை அரசுத் தலைவர் தேர்தல் இவ்வாண்டு நவம்பர் மாதம் நடைபெறவிருப்பதை மனதில் கொண்டு உயிர்ப்பு ஞாயிறு கொடுமைக்கு தகுந்த தீர்வுகள் காணும் வரையில் அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்கள் யாரையும் தான் சந்திக்கப் போவதில்லை என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

21 ஏப்ரல் 2019 உயிர்ப்பு ஞாயிறு காலை இலங்கையின் மூன்று ஆலயங்களிலும் மூன்று விடுதிகளிலும் நடத்தப்பட்ட தாக்குதல்களுள் கொழும்பு நகரின் புகழ்பெற்ற புனித அந்தோ னியார் திருத்தலத்திலும் கட்டுவபிட்டிய புனித செபஸ்தியார் கோவிலிலும் நடத்தப்பட்ட தாக்குதல்களில், அதிக உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன.



### பிரான்ஸ் நாட்டு ஆர்ஸ் நகரிலும்

## புனித ஜோன் மரிய வியான்னியின் அழியாத உடல்

அண்மையில் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றபோது அங்கு நான் பார்த்து பரவசமடைந்த நிகழ்வுகளில் ஒன்றாக பிரான்ஸ் நாட்டு நெவர் மாநகரில் அழியாத நிலையில் மெழுகு பூசி இன்றும் பாதுகாக்கப்படும் லூர்து நகரின் புனித பெர்னதெத் என்ற புனிதையின் அழியாத உடலை நேரில் பார்த்தேன்.

பிரான்ஸ் நாட்டு ஆர்ஸ் நகரில் பார்த்து பரவசமடைந்த புனித ஜோன் மரிய வியான்னி யின் அழியாத உடல் பற்றிய விடயத்தை பற்றி இங்கு வரைகிறேன். இவ்விடங்களுக்கு என்னை அழைத்துச் சென்ற நான் கரம்பொன் மெலிஞ்சிமுனை பங்கில் 90 களில் பணியாற் றிய போது துணை புரிந்த செபஸ்தியாம் பிள்ளை றொபின்சன் குணம் மற்றும் குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கைச் சேர்ந்த பேணாட் ஜேணோசன் ஆகியோருக்கு அன்பு நன்றிகள்.

பிரான்ஸ் நாட்டில் உள்ள ஆர்ஸ் நகரில் அழியாத உடல் இருக்கும் புனித ஜோன் மரிய வியான்னி பங்கு குருக்களின் பாதுகாவலராவார்.

இவரின் திருவிழா ஒகஸ்ட் 8ஆம் திகதியாகும். புனித ஜோன் பாப்டிஸ்ட் மரிய வியான்னி 08 மே 1786 முதல் 04 ஒகஸ்ட் 1859 வரை பிரான்ஸ் நாட்டில் உள்ள ஆர்ஸ் எனும் சிற்றூரின் பங்கு குருவாய் இருந்தவர்.

பிரெஞ்சுப் புரட்சியின் காரணமாக விசுவாசமும் இறை நம்பிக்கையும் குறைந்து போய் இருந்த அப் பங்கு இவரின் கடின உழைப்பால் மனம் மாறியது என்பர். மரியன்னை மீதும் நற்கருணை மீதும் மிகுந்த பக்தி கொண்டிருந்த இவர், ஒப்புரவு அருட்சாதனத்தில் மிகுந்த நேரத்தை செலவிட்டார். இவர் கத்தோலிக்க பங்கு குருக்களின் பாதுகாவலர் ஆவார்.



### பிரான்ஸ் நாட்டு நெவர் மாநகரில்

# இன்றும் பாதுகாக்கப்பட்டு வரும் புனித பெர்னதெத்தின் அழியாத உடல்

பிரான்ஸ் நாட்டு நெவர் மாநகரில் அழியாத நிலையில் மெழுகு பூசி இன்றும் பாதுகாக்கப்படும் லூர்து நகரின் புனித பெர்னதெத் என்ற புனிதையின் அழியாத உடலை பிரான்ஸ் நாட்டு நெவர் மாநகரில் நேரில் பார்த்து அதனை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களுக்கும் தெரிவிக்கும் நோக்கில் புனித பெர்னதெத் என்ற புனிதையின் அழியாத உடலுடன் கட்டுரை ஆசிரியர் தோன்றும் காட்சிப் படத்துடன் இச் செய்தி வரையப் படுகிறது.



லூர்து நகரம் பிரனீசு மலைத்தொடர்களின் அடிவாரத்தில் அமைந்துள்ள மலைகளால் சூழப்பட்ட குளிரான பச்சைப் பசேல் எனக் காட்சியளிக்கும் அழகிய நகரமாகும். மலையின் மறுபக்கம் ஸ்பெயின் நாடு அமைந்துள்ளது. 1858 ஆம் ஆண்டு பெர்னதெத் எனும் ஆடு மேய்க்கும் பெண்ணுக்கு மரியாள் காட்சி கொடுத்ததிற்கு பின்னர் இந்நகர் பிரான்ஸிலும் உலகம் முழுமைக்கும் பிரபலமானது. இவ்விடத்தில் கட்டப்பட்டுள்ள லூர்து அன்னை திருத்தலம் இயற்கை சூழலும் அமைதியும் கொண்ட இடமாகும்.

ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுமையிலிருந்தும் வருகை தரும் அறுபது இலட்சம் வருகையாளர்களின் மூலம் லூர்து நகர் பிரான்ஸ் நாட்டின் சுற்றுலாத் தலங்களில் பரிஸுக்கு அடுத்து இரண்டாமிடத்திலும் அகில உலக கத்தோலிக்க புனித பயணத்தலங்களில் ரோமிற்கும் புனித பூமிக்கும் அடுத்ததாக மூன்றாமிடத்திலும் அமைந்துள்ளது. 1858 ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 16 ஆம் திகதி வரை கன்னி மரி யாள் பெர்னதத்துக்கு மொத்தம் பதினெட்டு முறை காட்சி கொடுத்தார்.

7 ஜனவரி 1844 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் பிறந்து 16 ஏப்ரல் 1879 இல் தனது 35 ஆவது அகவை 35 இறந்து போனவர் புனித பெர்னதெத். உடல் நோய்களின் பாதுகாவலியாகப் போற்றப்படும் அவரின் திருவிழா 16 ஏப்ரல் (பிரான்ஸில் 18 பெப்ர வரி) இல் கொண்டாடப்படுகிறது. இவர் ஒரு திருக் காட்சியாளரும் கத்தோலிக்க புனிதரும் ஆவார்.

பெர்னதெத் தனது 22 ஆம்வயதில் நெவர்ஸ் நகரில் இருந்த இரக்கத்தின் சகோதரிகள் மடத்தில் துறவற வாழ்வைத் தொடங்கினார். நீண்ட நாள்கள் ஆஸ்துமா நோயால் அவதிப்பட்டு வந்த பெர்னதெத் 1879 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி தனது 35 ஆம் வயதில் இறந்தார்.

1927 ஜூன் 14 அன்று திருத்தந்தை பதினோராம் பயஸ் இவருக்கு அருளாளர் பட்டம் வழங்கினார். 1933 டிசெம்பர் 8 ஆம் திகதி அமல உற்பவ அன்னை திருவிழா அன்று திருத்தந்தை 11ஆம் பயஸ் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார். புனித பெர்னதத் சூபிரூசின் அழியாத உடல் இவர் வாழ்ந்த நெவர்ஸ் நகர மடத்தின் சிற்றாலயத்தில் இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

# உலகில் அழிந்து வரும் பல்லிகள்!



பூமியில் வாழ அனைத்து உயிரினங்களுக்கும் இடமும் உரிமையும் உண்டு. ஊர்வனங்கள், பறவையினங்கள், வன விலங்குகள், பூச்சிகள், தாவரங்கள் அனைத்தும் சேர்ந்துதான் ஒரு பல்லுயிரிக் கோளம் அமைகிறது. ஓர் உயிரினம் இவ்வுலகில் வாழவேண்டும் என்றால் அதற்கு மற்றோர் உயிரினத்தின் துணை அவசியமாகிறது. இதில் பல்லிகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பலரும் பார்ப்பதற்கே அருவருப்பு என நினைக்கும் இந்த ஊர்வன இனங்கள், மாறிவரும் சூழலியல் மாற்றங்களால் இன்று பல்வேறு சவால்களைச் சந்தித்து வருகின்றன.

பல்லிகளைப் பொறுத்தவரை நம் வீட்டு பல்லிகள், ஓணான்கள் ஆகிய சில வகை கள்தான் நமக்குத் தெரியும். ஆனால், இந்த உலகில் ஆயிரக்கணக்கான பல்லி வகைகள் இருக்கின்றன.




இந்த உயிரினங்களைக் கொண்டாட ஆண்டுதோறும் ஓகஸ்ட் 14 ஆம் திகதி உலக பல்லிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த தினமானது ஊர்வன இனக் காதலர்கள், விலங்கின ஆர்வலர்கள் மற்றும் சூழலியல் கல்வியாளர்களின் ஆதரவோடு நடத்தப்படுகிறது.

பல்வேறு நாடுகளில் உள்ள உயிரியல் பூங்காக்கள், சரணாலயங்கள், அருங்காட்சியங்கள் மற்றும் கல்லூரிகளில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றால் இந்த தினத்திற்கான சிறப்பு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதன்மூலம் பல்லிகளைப் பற்றிய விழிப் புணர்வு, தகவல்கள், அழிந்துவரும் இனங்கள், வேட்டையாடப்படும் உயிரினங்களை மீட்பு மற்றும் பாதுகாப்பது போன்றவை பற்றி விவாதிக்கப்படுகிறது.

## இதுவரை 5,600 இற்கும் மேற்பட்ட இனங்கள் கண்டுபிடிப்பு

பல்லிகள் குளிர்ந்த இரத்தம் கொண்ட ஊர்வனம் ஆகும். அவை நகர்ப்புறம் முதல் அமேசான் காடுகள் வரை பல்வேறு வகையான நிலப்பரப்பிலும் வாழ்ந்து வருகின்றன. உலகின் மிகப் பெரிய பல்லியான கொமோடா டிராகன் முதல் மிகச்சிறிய பல்லியான ப்ருக்ஸியா மைக்ரா வரை இது வரைக்கும் உலகில் 5600 இற்கும் மேற்பட்ட பல்லி இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதுபோக பல பல்லி இனங்கள் மனிதர்களுக்குத் தெரியாமலேயே வாழ்ந்து வருகின்றன எனவும் கூறப்படுகிறது. இந்தப் பல்லி இனங்களுக்கு இன்று பெரும் சவாலாக இருப்பது வாழ்விட இழப்புதான்.



பல்லிகளைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள மதுரையைச் சேர்ந்த ஊர்வன அமைப்பின் விஷ்வா கூறுகிறார்:

ஓணான், கவுளி, உடும்பு, பச்சோந்தி, அரணைகள் ஆகியவை சூழலைச் சார்ந்து உடல் வெப்பத்தை சமன் செய்திடும் உயிரினங்கள். எனவே ஆர்டிக் மற்றும் அன்டார் டிக் போன்ற குளிர் நிறைந்த பகுதிகளில் இவை வாழ்வதில்லை. காரணம் குளிர் ரத்தப் பிராணிகள் என்பதால் தங்கள் உடல் வெப்பத்தை உடலளவில் உற்பத்தி செய்திட இயலாது.

சுமார் 200 வகைக்கும் மேலான பல்லியினங்கள் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பல்லிகள் உயிர்ச் சங்கிலித் தொடர் சமன்பாட்டில் முக்கிய காரணியாக விளங்குகின்றன. பூச்சிகளின் பெருக்கத்தை கட்டுக்குள் வைப்பது போல் பல உயிரினங்களுக்கு (பறவை, பாம்புகள்) இரை விலங்காகவும் விளங்குகிறது.

கொசுக்களை தின்றொழித்த பல்லிகளை மனிதன் அதிக அளவில் கொன்றொழித்தான். ஆம், பல்லிகள்மீது மனிதன் கொண்டிருந்த மூட நம்பிக்கைகள் மற்றும் பூச்சிகளை ஒழிக்க பயன்படுத்திய உயிர்க்கொல்லி நச்சு மருந்துகள் இவற்றின் அழிவுக்குக் காரணமாக அமைகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பறக்கும் பல்லிகள் (Flying Lizards, பாறை ஓணான்கள் (Rock Agama), விசிறித் தொண்டை ஓணான்கள் (Fan Throated Lizard), மரப்பல்லிகள் வகைகள், பச்சைநிற காட்டு ஓணான்கள் உட்பட இன்னும் பல வகை இனங்களைக் காணலாம்.



நகரமயமாக்கல் பல்லி இனங்களின் வாழ்க்கைச் சூழலை பாதித்து அவ்வினத்தின் அழிவுக்கு வித்திட்டது. என் சிறுவயதில் இயல்பாய் நான் கண்டு விளையாடிய அரணைகள், ஓணான்களை இன்று காண்பதே அரிதாகிவிட்டது. தோட்டங்கள் கட்டடங்களாக ஆனதும், மண், சிமெண்ட் பூச்சால் பசுமை துளிர்க்க முடியவில்லை. அதனால் பல பல்லிகள் அழிந்தன. தண்ணீர் கேட்ட ராமருக்கு சிறுநீர் கொடுத்த கோபம், என் பகுத்தறிவு இல்லாத தலைமுறை வரை நீண்டது. விளைவு காய்ந்த நீளக் குட்சியில் நரம்பு கோத்த சுருக்கில் எத்தனை எத்தனை ஓணான்கள் மூக்குப்பொடி மூக்கில் இட்டு ஆட வைக்கிறேன் என்ற பெயரில் கொன்று குவித்திருப்போம், வாலில் நூள் கட்டி மின்கம்பத்தில் கட்டியிருப்போம், தீயில் வாட்டியிருப்போம்.

**இதேபோல நம்மில் பலரும் இன்னும் நம்பிக்கொண்டிருக்கும் விடயம் பல்லி விழுந்த உணவு முழு விஷம் என்பது. ஆனால், அதில் முழு உண்மையல்ல.**

பல்லி விழுந்த உணவை உண்டு மயங்கி விழுந்தவர்கள் பலரும் பல்லி விழுந்த செய்தியைக் கேட்ட பின்பே அதிர்ச்சியடைந்திருக்கக் கூடும். அதைத் தொடர்ந்து நீர்ச்சத்து இழந்து மயக்கமும் ஏற் பட்டிருக்கும் உடனே மருத்துவமனை அழைத்துச் சென்று குளூகோஸ் ஏற்றுவார்கள். பொதுவாக கழிவறை, குப்பைக்கூடை போன்ற இடங்களில் சுற்றும் பல்லியின் உடலில் தொற்றியிருக்கும் சால்மோனெல்லா என்கின்ற ஒருவகை தொற்றுக் கிருமியால் அது விழுந்த உணவுப் பண்டம் கெட்டுப்போயிருக்கலாம்.

இதில் சூடான உணவு என்றால் கிருமிகள் இறந்து போகும். சரி ஆறிய உணவு என்றா லும் சாப்பிட்ட உடனே வாந்தி மயக்கம் போன்ற உடலியல் மாற்றங்கள் ஏற்படா. அதற்கு சில நாள்கள் பிடிக்கலாம்.

நாம் சிறுவயது முதலே பல்லி கண்டு ஒவ்வாமை வெளிப்படுத்துவது, தவறான பார்வை போன்றவற்றால் மட்டுமே ஒருவருக்கு வாந்தி வரும்.

நகரமயமாக்கலின் விளைவால் பெருகி வரும் பூச்சிக்கொல்லிகளால் பூச்சியினங்கள் அழிவதோடு மட்டும் இல்லாமல் அதை நம்பி வாழும் இவ்வுயிரினமும் அழிந்து வருகிறது. மற்ற உயிரினங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை பல்லி போன்ற உயிரினத்திற்கும் கொடுத்தால் உணவுச் சங்கிலியும் சீராக அமைய வாய்ப்புள்ளது.

**பல்லிகள் குளிர்ந்த இரத்தம் கொண்ட ஊர்வனம் ஆகும். அவை நகர்ப்புறம் முதல் அமேசான் காடுகள் வரை பல்வேறு வகையான நிலப்பரப்பிலும் வாழ்ந்து வருகின்றன. உலகின் மிகப் பெரிய பல்லியான கொமோடா டிராகன் முதல் மிகச் சிறிய பல்லியான ப்ருக்ஸியா மைக்ரா வரை இது வரைக்கும் உலகில் 5600 இற்கும் மேற்பட்ட பல்லி இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.**

# கோஹ்லி படைத்த மாபெரும் சாதனை!




10 ஆண்டுகளில் 20 ஆயிரம் ஓட்டங்களை தொட்ட முதல் வீரர் என்ற பிரம்மாண்ட சாதனையை படைத்துள்ளார் கோஹ்லி.

இந்திய கிரிக்கெட் அணி தற்போது மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. அந்த அணியுடனான ஒருநாள் தொடரில் விராட் கோஹ்லி 2 சதங்களை விளாசி மிரட்டினார்.

இதன்மூலம் புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார். அதாவது, சர்வதேச கிரிக்கெட்டில் 10 ஆண்டுகளில் 20 ஆயிரம் ஓட்டங்களுக்கும் மேல் குவித்துள்ளார். இவை டெஸ்ட், ஒருநாள், ரி20 ஆகிய மூன்று வகை கிரிக்கெட்டையும் சேர்த்த ஓட்டங்கள் ஆகும்.

இதற்கு முன்பு அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங் தான் இந்தச் சாதனையை படைத்திருந்தார். அவர் 2000 - 2009 ஆண்டுகளில் 55 சதங்களுடன் 18,962 ஓட்டங்கள் குவித்து முதலிடத்தில் இருந்தார். ஆனால், விராட் கோஹ்லி 2010 - 2019 ஆண்டுகளில் 67 சதங்களுடன் 20,018 ஓட்டங்கள் குவித்து அவரைப் பின்னுக்கு தள்ளியுள்ளார்.

மேலும் இந்தப் பட்டியலில், தென்னாபிரிக்காவின் ஜக் கலிஸ் (16,777) 3ஆவது இடத்திலும், இலங்கையின் ஜெயவர்த்தன (16,304) மற்றும் சங்ககார (15,999) ஆகியோர் 4ஆவது மற்றும் 5ஆவது இடத்திலும், இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் (15,962) 6ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்த சாதனையுடன் கோஹ்லி மற்றொரு சாதனையையும் செய்துள்ளார். மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக அதிக சதங்கள் அடித்த சச்சினின் சாதனையை (3 சதங்கள்) கோஹ்லி சமன் செய்துள்ளார். அத்துடன் அணித் தலைவராக ஓர் அணிக்கு எதிராக அதிக சதங்கள் அடித்தவர் (7 சதங்கள்) என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

## நான்காவது வெற்றியை தனதாக்கிய வல்வை எப்.சி.

வடக்கு – கிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 22 ஆவது ஆட்டத்தில் வல்வை எவ்.சி அணியை எதிர்த்து முல்லை பீனீக்ஸ் அணி மோதியது.

இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் 02:00 என்ற வல்வை எவ்.சி அணி முன்னிலை வகித்தது.


தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் வேறெந்த கோல்களும் பதிவு செய்யப்படாத நிலையில் ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் வல்வை எவ்.சி அணி வெற்றி பெற்றது.

வல்வை எவ்.சி அணி சார்பாக ஆபீஸ் இரு கோல்களை பெற்று கொடுத்தனர்.




தொடர்ச்சியாக வல்வை எவ்.சி. அணி நான்காவது வெற்றியை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# மீண்டும் ரவி சாஸ்திரி



இந்திய அணியின் பயிற்சியாளராக ரவி சாஸ்திரி மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ணத் தொடரோடு, இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளரான ரவி சாஸ்திரி, பந்துவீச்சுப் பயிற்சியாளர் பரத் அருண், துடுப்பாட்டப் பயிற்சியாளர் சஞ்சய் பாங்கர், களத்தடுப்புப் பயிற்சியாளர் ஸ்ரீதர் ஆகியோரின் பதவி காலம் முடிவடைந்தது.

இதனால் இந்திய அணிக்கு அடுத்த பயிற்சியாளருக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. இதனால் உலகில் இருந்து பல்வேறு கிரிக்கெட் பயிற்சியாளர்கள் விண்ணப்பித்தனர். இந்திய அணிக்குப் பயிற்சியாளர் ஆக வேண்டுமென்றால், அவர்கள் ஐ.பி.எல். போன்ற தொடர்களில் அந்த அணிகளுக்கு பயிற்சியாளராக இருக்கக் கூடாது என்ற விதிமுறையும் இருந்தது.

இதனால் ஐ.பி.எல்லில் குறிப்பிட்ட அணிகளில் பயிற்சியாளராக இருந்த சிலர், அந்த பதவியில் இருந்து ராஜினாமா செய்து, இதற்காக விண்ணப்பித்தனர்.

இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் கடந்த 30 ஆம் திகதியுடன் முடிவடைந்ததையடுத்து நேற்று முன்தினம் தலைமைப் பயிற்சியாளருக்கான தேர்வு நடைபெற்றது.

பயிற்சியாளரைத் தேர்வு செய்ய கபில் தேவ் தலைமையில் அன்ஷுமன் கெய்க்வாட், சாந்தா ரங்கசாமி ஆகியோரை கொண்ட குழு அமைக்கப்பட்டிருந்தது. தலைமைப் பயிற்சியாளராக ரவி சாஸ்திரி நீடிக்க வேண்டும் என்று கப்டன் கோஹ்லி விருப்பம் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து மும்பையில் உள்ள இந்திய கிரிக்கெட் சபை அலுவலகத்தில், பயிற்சியாளர் பதவிக்கான நேர்காணல் நேற்று முன் தினம் நடைபெற்றது.

அதில், இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக ரவி சாஸ்திரி மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் வரும் 2021 ஆம் ஆண்டு வரை இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியின் பயிற்சியாளராகுவதற்கு உலகின் பல முன்னணி வீரர்கள் விண்ணப்பித்திருந்தனர். ரவி சாஸ்திரியால்தான் இந்திய அணியில் பிரச்சினை வருகிறது, அவர் கோஹ்லிக்கு ஆதரவாக இருக்கிறார். கோஹ்லி இவருக்கு ஆதரவாக இருக்கிறார். இதனால் புதிய பயிற்சியாளர் வேண்டும் என்று ரசிகர்கள் கூறி வந்தனர்.

ஆனால் தற்போது மீண்டும் ரவி சாஸ்திரியே தெரிவு செய்யப்பட்டுள்ளமையால், ரசிகர்கள் தங்கள் புலம்பல்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

குறிப்பாக ஒரு ரசிகர் கடந்த முறை தேர்வின் போது, கும்ளே எந்த ஒரு வெற்றிகரமான சாதனைகள் படைக்கவில்லை என்று தான் அவரை அதிரடியாக பதவியில் இருந்து நீக்கினீர்கள், ஆனால் இந்த முறை நீங்கள் என்ன செய்துள்ளீர்கள் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# முதல் போட்டியிலேயே பார்சிலோனா தோல்வி

ஸ்பெயினில் நடைபெறும் முன்னணி உதைபந்து கழகங்களுக்கிடையிலான லா லிகா உதைபந்து தொடர், தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

இதில் நடப்புச் சம்பியனான பார்சிலோனா அணி, தனது முதல் போட்டியிலேயே அதிர்ச்சி தோல்வியடைந்துள்ளது.

சென். மாமஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், முன்னணி அணியான பார்சிலோனா அணி, அத்லெடிக் பில்போ அணியை எதிர்கொண்டது.

இரசிகர்களின் உச்சக்கட்ட எதிர்பார்ப்புக்கு மத்தியில், நடைபெற்ற இப்போட்டியில், இரண்டு அணிகளும் கோல் போட முட்டி மோதிக் கொண்டன.

அத்தோடு வழமைக்கு மாறாக அத்லெடிக் பில்போ அணி, ஆக்ரோஷமாக விளையாடியது. இதன்பலனாக முற்பாதியில் இரண்டு அணிகளாலும் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் முற்பாதி கோல் எதுவுமின்றி சமநிலைக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதியிலும், இரண்டு அணிகளினதும் ஆக்ரோஷம் நீண்டது.

எனினும், இறுதிவரை விட்டுக் கொடுக்காது போராடிய அத்லெடிக் பில்போ அணிக்கு 89ஆவது நிமிடத்தில் பலன் கிடைத்தது.

அணியின் வீரரான ஆரிட்ஸ் அடுரிஸ், அணிக்கான வெற்றி கோலை புகுத்தினார். இந்த கோலை அவர் பைசிக்கள் கோல் எனப்படும் முறையில் புகுத்தி அரங்கில் குழுமியிருந்த இரசிகர்களை கொண்டாட வைத்தார். இதனால் அத்லெடிக் பில்போ அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலைப் பெற்றது.

மேற்கொண்டு இரு அணிகளாலும் கோல் அடிக்க முடியாததால், போட்டியின் இறுதியில் பில்போ அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிப் பெற்றது.

# பங்களாதேஷ் பயிற்சியாளராக ரஸ்ஸல் டொமிங்கோ நியமனம்!




பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக, தென்னாபிரிக்காவின் ரஸ்ஸல் டொமிங்கோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தத்தில் ரஸ்ஸல் டொமிங்கோ, பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக செயற்படவுள்ளார் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதியிலிருந்து பங்களாதேஷ் அணியுடன் இணையும் 44 வயதான ரஸ்ஸல் டொமிங்கோ, இதற்கு முன்னதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகவும் இருந்துள்ளார்.

அவ்வப்போது முன்னணி அணிகளுக்கு அதிர்ச்சி கொடுக்கும் பங்களாதேஷ் அணி, அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ண தொடரில், லீக் சுற்றுகளுடன் வெளியேறியது மட்டுமல்லாமல், புள்ளிப்பட்டியலிலும் 8ஆவது இடம் பிடித்தது.

தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுடன் மட்டுமே வெற்றிபெற்றது. இதில் 606 ஓட்டங்கள் குவித்தும், 11 விக்கெட்டுகள் வீழ்த்தியும் ஷகிப் அல் ஹசன் மட்டுமே சற்று ஆறுதல் அளித்தார். ஏனைய வீரர்கள் ஓரிரு போட்டிகளில் மட்டுமே சிறப்பாக விளையாடினர்.

இந்த நிலையில், உலகக்கிண்ண தொடரில் அணியின் தலைமைப் பயிற்சியாளராக செயற்பட்ட ஸ்டீவ் ரோட்ஸின், செயற்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் இல்லை என கூறி அவரை அதிரடியாக தலைமைப் பயிற்சியாளர் பதவியில் இருந்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை நீக்கியது.

கடந்த 2018ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட 2 வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1 வருட பதவிக் காலம் மீதமிருக்கும் நிலையில், அவரை நீக்கி பங்களாதேஷ் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.



## ஜெனரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களவார இதழான 'அனிதா' தனது இவ்வார இறுதிப் பத்திரிகையில் இந்தத் தகவலை வெளியிட்டது.

எனினும், வேறு சுயாதீன செய்திவட்டாரங்கள் இத்தகவலை உறுதிப்படுத்தவில்லை.

"தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினல் ஜெனரல் மகேஷ் சேனநாயக்காவின் பதவிக்காலம் ஞாயிறுடன் முடிவடைவதை அடுத்து, புதிய இராணுவத் தளபதி நியமனம் பற்றி அறிவிப்பை நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். ஆனால் இதுவரை அது குறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல் ஏதும் வெளியாகவில்லை" – எனப் பாதுகாப்புத்துறை பிரபல விமர்சகர் ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

தற்போதைய இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கா ஏற்கனவே ஒரு சேவை நீடிப்பைப் பெற்றிருந்தார். அது இன்று ஓகஸ்ட் 18ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. மேலும் ஒரு சேவை நீடிப்புக்கு ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா விண்ணப்பித்திருந்தார் என்றும், எனினும் அது ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டு விட்டது என்றும் 'அனிதா' வார இதழ் தெரிவித்துள்ளபோதிலும், அத்தகைய விண்ணப்பம் எதையும் தாம் சமர்ப்பிக்க வில்லை என ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, அவர் இன்றுடன் ஓய்வு பெறுகின்றமையால் புதிய இராணுவத் தளபதி நியமனம் எந்நேரத்திலும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா தற்போது இராணுவத்தின் இரண்டாவது தர நிலையில் –படை அதிகாரிகளின் தலைமைப் பதவியில் – உள்ளார். கடந்த ஜுன் 21ஆம் திகதி 55 வயதை எட்டியமையை அடுத்து ஓய்வில் செல்லவேண்டியிருந்த அவருக்கு, இந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதி வரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி நீடிப்பு வழங்கியிருந்தார்.

அடுத்த இராணுவத் தளபதி பதவிக்கு மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவின் பெயரோடு மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகேயின் பெயரும் அதிகம் அடிபட்டதாக மேற்படி சிங்கள வார இதழ் தெரிவித்தது.

மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகேயின் மூத்த சகோதரர் மேஜர் ஜெனரல் தம்மிக்க லியனகே ஏற்கனவே இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர். அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கண்காணிப்பில் முன்னெடுக்கப்படும் ஒரு திட்டத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கின்றார். அதனால் அவருக்கும் ஜனாதிபதி சிறிசேனவுக்கும் இருக்கும் நெருக்கத்தின் அடிப்படையில் புதிய இராணுவத் தளபதி பதவி சத்தியப்பிரிய லியனகேக்கே கிட்டுவதற்கு அதிக வாய்ப்புண்டு எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும், மறுபுறத்தில், பொலனறுவையில் தமது குடும்பத்துக்குள்ள உறவு நிலைமைகளைக் காட்டி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் சத்துரிகா சிறிசேனவுடன் நல்ல பரிச்சயத்தைப் பேணினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் – ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நெருங்கி வருவதால் சில சமயங்களில், தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்காவுக்கு மேலும் மூன்றுமாத காலசேவை நீடிப்பை வழங்கும் முடிவு ஒன்றை எடுப்பதன் மூலம் அடுத்த இராணுவத் தளபதியை நியமிக்கும் பொறுப்பை புதிய ஜனாதிபதியிடம் விட்டுவிடுவதற்கும் மைத்திரிபால சிறிசேன முடிவு செய்யக் கூடும் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

– இப்படி அந்த சிங்கள வார இதழ் மேலும் குறிப்பிட்டது. (உ)

## கூடிக் கலைந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை கூடிய ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் எந்த இறுதித் தீர்மானத்துக்கும் வரவில்லை.

அரசியல் கூட்டணியின் யாப்பை திருத்துவது உட்பட்ட பல விடயங்களில் இதன்போது இணக்கம் காணப்பட்டது.

அதேசமயம் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடும் விடயத்தைத் தீர்மானிப்பதற்கும், கூட்டணி அறிவிப்பு தினத்தன்று வேட்பாளரை அறிவிப்பதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம் எடுத்து அறிவிக்க நேற்றைய கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் தமது சம்மதத்தை வழங்கியுள்ளனர்.

இதன்படி அடுத்துவரும் நாள்களில் ஐக்கிய தேசியக் கட்சி, நாடாளுமன்ற – நிறைவேற்றுக் குழுக்களைக் கூட்டி ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் ஒரு முடிவை எடுக்குமெனத் தெரிகிறது. (ஐ)

## சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

எவ்வாறான எதிர்ப்புகள் வந்தாலும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்குவது உறுதி என்றும் அவர் கூறினார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொரு கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். ஆனால், நான் ஒரு விடயத்தை உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதாவது, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ ஆகிய நான் நிச்சயமாக வேட்பாளராகக் களமிறங்குவேன் என்பது மட்டும் உறுதியாகும். இது தொடர்பாக இரண்டு பேச்சுக்களுக்கு இனிமேல் இடம் கிடையாது.

இந்த ஜனாதிபதித் தேர்தல் குறித்து மக்கள் தீர்மானங்களை எடுக்கும்போது சில விடயங்களைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விசேடமாக சுதந்திரமாகக் கருத்துக்களை முன்வைக்கும் நிலைமை, அச்சுறுத்தல் இன்றி வாழும் சூழ்நிலை என்பன தொடர்பாக மக்கள் சிந்திக்க வேண்டும்.

மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்குவதோடு, தேசிய பாதுகாப்பையும் பலப்படுத்தவேண்டும். இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதே எமது பிரதான இலக்காகும். சிங்கள –பௌத்த கொள்கைகளுடனான ஆட்சியே இந்த நாட்டுக்கு இப்போது தேவைப்படுகிறது – என்றார். (ஐ)

## நவம்பர் 16 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறியமுடிந்தது.

அதற்கு முன் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்துவது பற்றி உயர்நீதிமன்றத்திடம் ஜனாதிபதி வினவியுள்ளார்.

எவ்வாறாயினும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப் போதியளவு கால அவகாசம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் இருக்குமா என்பதை நோக்கினால் அதற்கான வாய்ப்பு குறைவென அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## ஐ.நா. சிறப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு அகதிகளைப் பார்வையிட்டார்.

உயிர்த்த ஞாயிறுதினத்தில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலையடுத்து நீர்கொழும்பில் தங்கியிருந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அகதிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஒரு தொகுதியினர் மூன்று கட்டங்களாக வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள புனர்வாழ்வு நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுத் தங்க வைக்கப்பட்டனர். அவர்களில் குறிப்பிட்ட ஒரு தொகுதியினர் மீண்டும் சுய விருப்பின் பேரில் நீர்கொழும்பு திரும்பிச் சென்றுள்ள நிலையில் ஒரு பகுதியினர் புனர்வாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தங்க வைக்கப்பட்டவர்களைப் பார்வையிட்ட ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர், அவர்களது தற்போதைய நிலை, தீவிரவாதத் தாக்குதலின் பின்னரான நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

முன்னதாக வவுனியா, குருமன்காடு கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் வவுனியா மாவட்ட மத நல்லிணக்கக் குழுவினரைச் சந்தித்து தீவிரவாதத் தாக்குதலின் பின்னர் மத நல்லிணக்கம் குறித்தும், தற்போது மத நல்லிணக்க நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தார். (ஐ-100)

## இராணுவம் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில், ஊரிக்காடு பகுதியிலுள்ள இராணுவத்தினரின் கடையொன்றில் இந்த தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலை அடுத்து, இராணுவத்தினர் சுற்றிவளைப்பை நடத்தி 3 இளைஞர்களைக் கைது செய்து வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து கைப்பற்றியவை என இரண்டு வாள்களையும் கையளித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையிட்டுள்ளார்.

தனது பாதுகாப்பு அதிகாரிகள் மூலம் கிடைத்த பாதுகாப்பு தொடர்பான தகவல்களை ஜனாதிபதியிடம் பகிர்ந்துகொண்ட கோட்டாபய, இது குறித்து கவனம் செலுத்துமாறு கேட்டுள்ளார்.

கோட்டாபயவின் தகவல்களையடுத்து அது தொடர்பில் முழு விசாரணை நடத்த அரச புலனாய்வுத்துறையினருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இந்த விசாரணைக்கு இராணுவபுலனாய்வுத்துறையையும் ஒத்துழைக்கக் கேட்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்குச் செல்லும்போது கூடுதல் பாதுகாப்பை வழங்குமாறு ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. (ஐ)

## வகுப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் தொடர்பான மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

ஓர் இனத்தினுடைய வளர்ச்சியின் முதுகெலும்பாக விளங்குவது கல்வி ஒன்றேயாகும். முப்பது ஆண்டுகால யுத்தத்தின் பின்பும் எழுந்து நிற்க நாம் இன்று கல்வியைத் தவிர வேறு எதனையும் நம்பியிருக்க முடியாது.

எமது பல்கலைக்கு மாணவர்களை உரிய காலத்தில் உள்ளீர்த்தல், வெளியேற்றல், அவர்களுக்கு உரிய நேரத்தில் பட்டமளிப்பு விழாவை நடத்துதல், சிறந்த பௌதீக சூழலில் கல்வி கற்றல் போன்ற வழமையான செயற்பாட்டைச் செய்வதென்பதே இன்று கடினமாகிவிட்ட நிலையில் நாம் வளர்ச்சியை நோக்கி சிந்திப்பதென்பது சற்றுக் கேலியாகவே உள்ளது.

இராமநாதன் நுண்கலைத் துறையும் சித்த மருத்துவ அலகும் இன்றுவரை வளர்ச்சியடையாது அடுத்த கட்டத்துக்கு தரமுயர்த்தப்படாமலேயே உள்ளன.

எமது பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் உண்மையான நோக்கத்தை எமது அரசியல் தலைவர்களோ கல்வியாளர்களோ அறிந்திருப்பார்களெனில் அவை இன்று அவ்வாறு தரமுயர்த்தப்படாமல் இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

எமது பல்கலைக்கழகத்தில் பல கட்டடங்கள் உரிய காலத்தில் கட்டி முடிக்கப்படாமல் தற்காலிகக் கட்டடங்களில் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

இவற்றை எல்லாம் பற்றிச் சிந்திக்கவேண்டியவர்கள் மாணவர்கள் மட்டும் அல்லர். இவற்றைச் சிந்திப்பதற்காகவே பல்கலையில் பேரவை, மூதவை என்பன இருக்கின்றன. அத்துடன் இவற்றை சுட்டிக்காட்டவேண்டியது எமது அரசியல் தலைவர்களதும் ஊடகங்களினதும் கடமையாகும்.

நாம் முக்கியமான சில பிரச்சினைகளுக்காக மட்டுமே வகுப்புப் புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தோம். எமது பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க இம்முறையைக் கையாண்டால் எமது கல்வியே பாதிக்கும்.

அந்தவகையில் எமது முக்கிய பிரச்சினையாகக் கருதிய சில பிரச்சினைகளைத் தீர்க்கக் கோரி கடந்த 15 ஆம் திகதி முதல் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்த நிலையில் எமது பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரியால் இவை குறித்து சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் மீது பூரண திருப்தியற்றபோதிலும் தகுதி வாய்ந்த அதிகாரியின் மீது கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் இன்று முதல் வழமைபோல் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம் – என்றுள்ளது. (ஐ)

## கோட்டாபயவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு வருகின்றார். எத்தனை விகாரைகள், ஆலயங்கள் ஏறி இறங்கினாலும் அவர் செய்த பாவங்களுக்கு ஒருபோதும் மன்னிப்புக் கிடையாது. ஏதோவொரு விதத்தில் அவருக்குத் தண்டனை கிடைத்தே தீரும்.

– இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெரிய குற்றச்சாட்டுக்களைச் சுமந்து நிற்கும் கோட்டாபயவை வெட்கம் இல்லாமல் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த களமிறக்கியுள்ளார். ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட ராஜபக்ஷ குடும்பத்தில் எவருக்கும் தகுதியில்லை. அந்த முழுக் குடும்பம் மீதும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சர்வாதிகார ஆட்சியில்தான் மேற்படிக் குற்றங்களை ராஜபக்ஷ குடும்பம் புரிந்துள்ளது.

எனவே, கடந்த தடவை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தது போல் இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அவரின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவும் தோல்வியடைவார் என்பது உறுதி. வெற்றிவாகை சூடப்போகின்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று விரைவில் அறிவிக்கப்படும் – என்றார்.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குதல் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்படவுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரையும் இந்தச் சந்திப்பில் பங்கேற்க வைப்பதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சந்திப்பின்போது எடுக்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே சுதந்திரக் கட்சியின் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் முன்னெடுக்கப்படும்.

அதேவேளை, கூட்டணி அமைக்கும் முயற்சி கைகூடாத பட்சத்தில் சுதந்திரக்கட்சி மாற்று வழியைத் தேடலாம் என்றும், சஜித் பிரேமதாஸ போட்டியிடும் பட்சத்தில் அவருக்கு ஆதரவு வழங்கலாம் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகின்றது.

இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் சுதந்திரக்கட்சி மேலும் உடையுமெனவும் கூறப்படுகின்றது. (ஐ)

## என்ன குற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நானே. எனக்கு மாற்றீடாக எமது கட்சியிலிருந்து எவரும் களமிறங்கமாட்டார்கள். வீண் வதந்திகளை எவரும் நம்பவே வேண்டாம். வடக்கு – கிழக்கு – மலையகம் என நாடெங்கிலும் பரந்து வாழும் தமிழ்பேசும் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எமது ஆட்சியில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பேன்.

என்னைத் தமிழ்பேசும் மக்களின் எதிரியாகச் சித்தரித்துக் காட்ட அரசியல்வாதிகள் சிலர் முயற்சிக்கின்றார்கள். தமிழ்ப் பயங்கரவாதிகளின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை மீட்டெடுத்தது ராஜபக்ஷ குடும்பம். இப்படிப்பட்ட ராஜபக்ஷ குடும்பத்தினரைக் குற்றவாளிகள் என்று அந்த அரசியல்வாதிகள் கண்டபடி விமர்சிக்கின்றார்கள். நாம் உண்மையில் என்ன குற்றம் செய்தோம்? எம்மை விமர்சிப்பதை உடன் நிறுத்துமாறு அந்த அரசியல்வாதிகளிடம் வேண்டிக்கொள்கின்றேன்.

எந்தத் தடைகள் வந்தாலும் அதனைத் தகர்த்தெறிந்து ஜனாதிபதித் தேர்தலில் நான் வெல்வது உறுதி. இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பாதுகாவலனாக – நல்லதொரு தலைவனாக நான் செயற்படுவேன் – என்றார். (ஐ)

01.07.2019

# 129 சாரதிகள் கைது!

கொழும்பு, ஓக. 18

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய மேலும் 129 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரையான 24 மணிநேர காலத்தில் இந்த 129 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பமான தினத்தில் இருந்து இதுவரை 8 ஆயிரத்து 993 வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மைத்திரிபாலவுக்கு பிரதி பிரதமர் பதவி?



கொழும்பு, ஓக. 18

கோட்டா – மஹிந்த அரசில் மைத்திரிபால சிறிசேனவுக்குப் பிரதிப் பிரதமர் பதவி வழங்குவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்–

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாகவும், மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராகவும் கொண்ட அரசில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பிரதிப் பிரதமர் பதவி வழங்கப்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன.

நாட்டு மக்கள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என எதிர்பார்த்துள்ளதால் அந்தத் தேர்தலை முதலில் நடத்துவது உசிதம். ஜனாதிபதித் தேர்தலோடு மாகாண சபைத் தேர்தலும் ஒன்றாக நடத்தப்படுவதில் எந்தவித தவறும் இல்லை. ஆனால் அது மயக்கமான நிலைமையைத் தோற்றுவிக்கும்.

இதேவேளை, நீதிமன்றத்தை நாடி ஜனாதிபதித் தேர்தலை பிற்போடும் சாத்தியமுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முதலாவதாகவும் இல்லாவிடின் இரு தேர்தல்களையும் கூட்டாகவும் நடத்தலாம். அவ்வாறு இல்லாவிட்டால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபை தேர்தல் நடத்தப்படவேண்டும். எனினும் ஜனாதிபதித்தேர்தலைபிற்போடமுடியாது. அவ்வாறான தீர்மானத்தை எடுக்கத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எந்த உரிமையும் இல்லை – என்றார். (ஐ)

# கூட்டணி அமைந்தால் பெரமுனவே தலைமை

## கூறுகின்றார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு, ஓக. 18

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டாலும், அந்தக் கூட்டணிக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனதான் தலைமை தாங்கும் என்று பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில், இடம்பெற்ற கூட்டணிக் கட்சிகளுடனான பேச்சைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டு எதிரணியிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து கூட்டணியொன்றை அமைப்பது தொடர்பான பேச்சில் ஈடுபட்டுள்ளன.

அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து, கூட்டணியின் யாப்பை ஸ்தாபிப்பது தொடர்பாகவே முதற்கட்டமாகத் தற்போது ஆராயப்பட்டுள்ளது. இது குறித்து பல்வேறு கருத்துக்களும் கூட்டணிக் கட்சிகளின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மீண்டும் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளோம்.

ஐக்கிய தேசிக் கட்சியின் எதிர்ப்புக் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைக்க வேண்டும் என்பதுதான் எமது பிரதான நோக்கமாக இருக்கிறது. இந்தப் பெரும் கூட்டணிக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமை தாங்குவதுதான் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

தற்போதைய சூழ்நிலையில், எமது தரப்புக்கே பலம் அதிகமாக உள்ளது. எவ்வாறாயினும் நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனும் பேச்சுக்களை நடத்தத் தயாராகவே இருக்கிறோம்.

இந்த விடயத்தில் நாம் தெளிவாக இருக்கிறோம். எனினும், இறுதி முடிவுகள் எவ்வாறு இருக்கும் என்பது எதிர்க்காலத்தில்தான் தெரிய வரும் – என்றார். (ஐ)

# நுவரெலியா விபத்தில் இருவர் சாவு!

கொழும்பு, ஓக. 18

நுவரெலியாவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

நுவரெலியா கந்தப்பளைப் பகுதியில் நேற்று ஓட்டோ ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்தமை காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த இருவர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.08.2019 இல் வெளியிடப்பெற்றது.